பக்கங்கள்: 11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 18 திங்கட்கிழமை 04.10.2021 கதிர் 333

### இது ரகசியம் அல்ல!

தமது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் மற்றைய எம்.பிக்கள் நால்வரும் கட்சியின் கட்டுப்பாட்டை மீறி அரசுக்குக் கூஜா தூக்குகின்றார்கள் என்று கட்சியின் தலைவர் ரவூவ் ஹக்கீம் விசனம் தெரிவித்திருக்கின்றார்.

கட்சியின் கட்டுப் பக்கம்02

## யாழ்.மத்திய கலாசார நிலையம் வெகுவிரைவில் திறப்பு 5 வருட பராமரிப்புச் செலவு இந்தியாவால் பொறுப்பேற்பு

### அந்நாட்டு வெளியுறவுத்துறை செயலர் நேற்று உறுதி

(இ.கலையமுதன்)

இந்திய அரசின் நிதிப் பங்களிப்போடு யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள மத்திய கலாசார நிலையம் இலங்கை அரசின் பங்களிப்புடன் வெகுவிரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது என இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் ஹர்ஷ்வர்தன் ஷ்ரிங்லா தெரிவித்தார்.

மேற்படி கலாசார மத்திய நிலையத்தைப் பார்வையிட இந்திய வெளியுறவு செயலாளர் நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்திருந்தார். இதன்போது ஏற்பாடு செய்யப்பிட்டிருந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

யாழ்ப்பாணம் நகரின் மத்தியில் மிகப் பிரம்மாண்டமான மண்டபமாக இந்திய அரசின் நிதிப் பங்களிப்போடு இந்த கலாசார மத்திய நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மத்திய நிலையமானது வெகுவிரைவில் 2



# தமிழரின் அபிலாஷைகளை இலங்கை பூர்த்திசெய்ய இந்தியா துணை நிற்கும்



### யாழில் உள்ளூர் அரசியல் பிரமுகர்களுடனான சந்திப்பில் வெளிவிவகார செயலர் வாக்குறுதி

(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

ஐக்கிய இலங்கைக்குள் சமத்துவம், சமாதானம், நீதி மற்றும் கௌரவம் ஆகியவற்றுக்கான தமிழ் மக்களின் அபிலாஷைகளை இலங்கை பூர்த்தி செய்ய வேண்டும். இவை நிறைவேற இந்தியா துணை நிற்கும்.

- இவ்வாறு இந்திய வெளியுறவுச் செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா தெரிவித்தார். 2

### கடமைக்கு இடையூறு விளைவித்ததால்

## பிரதேச சபையின் ஈ.பி.டி.பி. உறுப்பினரை மேல் வெடி வைத்து எச்சரித்த பொலிஸார்

(ந.லோகதயாளன்)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் ஈ.பி.டி.பி. உறுப்பினர் கடமைக்கு இடையூறு விளைவித்தமையால் பொலிஸார் வானத்தை நோக்கிச் சூடு நடத்தி எச்சரித்தனர்.

இந்தச் சம்பவம் ஊரெழு பகுதியில் நேற்றிரவு 8 மணியளவில் இடம்பெற்றது.

ஊரெழு பகுதியில் பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்தனர். மோட்டார் சைக்கிள் ஒன்றில் இருவர் தலைக்கவசமின்றி ஆபத்தான முறையில் பயணித்தனர்.

அவர்களை வழிமறித்து சாரதி அனுமதிப்பத்திரத்தை வாங்கி தண்டனைப் பத்திரம் எழுத முற்பட்டபோது அங்கு வந்த பிரதேச சபை உறுப்பினர் பொலிஸாருடன் முரண்பட்டார்.

அவரது நடவடிக்கை எல்லை மீறிச் சென்றதால் 11

## மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்த முடியாது

### சஜித்தின் கருத்துக்கு அரசு இப்படிப் பதில்



இலங்கையின் தற்போதைய நிலைமைக்கு மத்தியில் மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்த முடியாது.

- இவ்வாறு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்தார். 2

## நாளாந்தக் கொரோனா சாவு எண்ணிக்கை மேலும் வீழ்ச்சி

### நேற்றுமுன்தினம் 40 பேர் பலி

இலங்கையில் நீண்ட நாள்களின் பின்னர் நாளாந்தக் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 50 ஐ விடக் குறைவாகப் பதிவாகியுள்ளது. நேற்றுமுன்தினம் 40 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன என்று சுகாதார சேவைகள் 2

## யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஐவருக்கும் மாணவர்களுக்கும் கொரோனா

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். பல்கலைக்கழக இசைத் துறை விரிவுரையாளர்கள் ஐந்து பேருக்கும் மாணவர்கள் மூவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக ஆய்வு கூடத்தில் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஊடாக அனுப்பி மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 5 விரிவுரையாளர்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

விரிவுரையாளர்களுடன் மாணவர்கள் மூவரும் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளனர். 2

## இலங்கையின் உண்மையான நண்பன் இந்தியா!

### ராஜபக்ஷ ஆட்சியில் உறுதி என்கிறார் சுப்பிரமணியன் சுவாமி

இலங்கையின் உண்மையான நண்பன் இந்தியா என்பது ராஜபக்ஷ ஆட்சியில் உறுதி செய்யப்பட்டுள்ளது என்று பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் மாநிலங்களவை உறுப்பினருமான சுப்பிரமணியன் சுவாமி இந்திய ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

சுப்பிரமணியன் சுவாமி, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில் இலங்கை வரவுள்ளார்.

இதனிடையே இந்திய ஊடகம் ஒன்றுக்குக் கருத்து வெளியிட்டுள்ள அவர், இலங்கையின் கடந்த கால ஆட்சியாளர்கள் சீனாவுடன் பேணிவந்த நெருக்கமான உறவு தற்போது காணப்படவில்லை என்று கூறியுள்ளார்.

இந்நிலையில், 2



## நேற்று தொற்று 800

இலங்கையில் நேற்று 800 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாட்டை மீறி, ஜனாதிபதிக்கு அதிக அதிகாரங்களை வழங்கும் இருபதாவது அரசமைப்புத் திருத்தத்துக்கு இந்த நால்வரும் வாக்களித்தனர்.

பின்னர் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் நிதிச் சட்டங்கள் வந்த போது அதற்கும் ஆதரவாக வாக்களித்தனர் என்று வெதும்புகின்றார் ஹக்கீம்.

ஆனால் இவை மட்டுமல்ல, இவற்றையும் தாண்டி பல விடயங்களுக்கு முஸ்லிம் காங்கிரஸின் எம்.பிக்கள் அரசுக்குத் துணை போன தகவல் ஹக்கீமுக்கும் தெரியும் என்கின்றன சில வட்டாரங்கள்.

நல்லாட்சி அரசின் காலத்தில் இருந்தே மொட்டுத்தரப்பினர் முஸ்லிம் கட்சிகளுக்கு எதிராகக் காழ்ப்புணர்ச்சி கொண்டிருந்தனர் என்பது தெரிந்ததுதான்.

முஸ்லிம் தரப்புகளுக்கு எதிராக மோசமான நிலைப்பாட்டை எடுத்து, காட்டமாக விமர்சித்தவர் பௌத்த, சிங்கள இன வெறிப் போக்குக் கொண்ட, பிவித்ரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில்ல.

இப்போது அவர் எரிபொருள் அமைச்சர். எரிபொருள் பற்றாக்குறையால் தவிக்கும் நாட்டுக்கு நீண்ட காலக் கடன் அடிப்படையில் எரிபொருள் விநியோகம் செய்யும்படி அவர் பிச்சைப் பாத்திரம் ஏந்தி, வளைகுடா நாடுகளுக்கு – முஸ்லிம் தேசங்களுக்கு – ஒரு தண்டல் 'விசிட்' அடித்துத் திரும்பியிருக்கின்றார். ஓமானிடம் உதவி கிடைக்கும் சாத்தியம் தென்படுவதாக செய்திகள் தெரிவித்தன.

இந்த நாடுகளில் உதய கம்மன்பில்ல பிச்சைப் பாத்திரம் ஏந்தி நின்ற சமயங்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ரிஷாத் பதியுதீனின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியவற்றைச் சேர்ந்த எம்.பிக்கள் சிலரும் அந்தந்த நாடுகளில் நின்றனர் என்று செய்திகள் கசிந்துள்ளன.

எரிபொருள் அமைச்சர் உதய கம்மன்பில்லவின் பிச்சைப் பாத்திரம் ஏந்தும் நடவடிக்கைக்கு ஆதரவும், பலமும் வழங்கும் முகமாக முஸ்லிம் எம்.பிக்கள். அங்கு செயற்பட்டனர் – அதுவும் முஸ்லிம்களைக் கரித்துக் கொட்டிய உதயகம்மன்பில்லவுக்கு ஆதரவாக முஸ்லிம் நாடுகளின் உதவி, ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுக்க, பஸிலின் வழிகாட்டலில் முஸ்லிம் எம்.பிக்களே நேரில் சென்று உதவினர் – என்றெல் லாம் கூறப்படுகின்றது.

இவையே ரவூப் ஹக்கீமின் மனதைப் பெரிதும் குடைகின்றன என்று கூறப்படுகின்றது.

இப்படி கொள்கையைப் புரட்டிப் போட்டுக் கொள்வது முஸ்லிம் தலைவர்களின் பழக்க வழக்கம்தான் – அது பரவணிப் பழக்க வழக்கம்தான் – என்பதை மறுப்பதற்கில்லை.

★ ★ ★

'ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம். இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்' என்பார்கள்.

அந்த மாதிரியாகி இருக்கின்றது கெரவலப்பிட்டிய யுகதனவி மின் வலு உற்பத்தி நிலையத்தின் நாற்பது வீதப் பங்குகளை அமெரிக்கக் கம்பனிக்குப் பெயர் மாற்றிக் கொடுத்த விவகாரம்.

உள்நாட்டில் ஆளும் மொட்டுக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் இது விடயத்தில் அரசுத் தலைமைக்கு எதிராக சீற முற்பட்டிருப்பது தெரிந்த விடயம்தான்.

இதே வாய்ப்புக்காக இந்திய – ஜப்பான் கூட்டுக் கம்பனி ஒன்று, சீனக் கம்பனி ஒன்று, தென் கொரிய நிறுவனம் ஒன்று என மொத்தம் மூன்று நிறுவனங்களே கேள்விப் பத்திரங்களை ஒப்படைத்து விட்டு பதிலுக்குக் காத்திருந்தன.

ஆனால் அந்த மூன்றையும் நிராகரித்து விட்டு, கேள்விப் பத்திரமே சமர்ப்பிக்காத அமெரிக்க நிறுவனத்துக்கு பின்கதவால் இந்த விடயத்தை ஒப்படைத்து விட்டார் புதிய நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ.

தம்மை ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்துக்கு இடையே நியூயோர்க்கில் சந்தித்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர், ஜி.எல்.பீரிஸிடம் இவ்விவகாரத்தை ஒட்டிக் கடும் ஆட்சேபம் தெரிவித்திருக்கின்றார் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் என்றும் கூறப்படுகின்றது.

இதனையடுத்தே கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு முனையத்தை அபிவிருத்தி செய்யும் பொறுப்பை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு நெருக்கமான அதானிக் குழுமத்திடம் வழங்கும் ஒப்பந்தத்தை அவசர அவசரமாக முன்னெடுத்து ஒப்பமிட்டது இலங்கை என்கின்றன சம்பந்தப்பட்ட வட்டாரங்கள்.

எல்லாத் தரப்புகளையும் திருப்திப்படுத்த முயலும் இலங்கை, ஒரு தரப்பிடமும் கூட நல்ல பெயர் எடுக்காது என்பதுதான் நிலைமை.

– மின்னல் –

## தமிழரின் அபிலாஷை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணத்துக்கு நேற்று மாலை விஜயம் மேற்கொண்ட இந்திய வெளிவிவகாரச் செயலாளர், இரவு உள்ளூர் அரசியல் பிரமுகர்கள் மற்றும் கல்வியலாளர்களைச் சந்தித்து இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் கலந்துரையாடலில் ஈடுபட்டார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். திருநெல்வேலியில் அமைந்துள்ள தனியார் விடுதியில் வைத்து அரசியல் பிரமுகர்களையும், கல்வியலாளர்களையும் வெளிவிவகாரச் செயலாளர் சந்தித்து கலந்துரையாடினார். இதன்போது இரவு நேர விருந்துபசாரமும் இடம்பெற்றது.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, யாழ். இந்திய துணைத் தூதர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன் ஆகியோரும் இதன்போது உடனிருந்தனர்.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், சுரேஷ் பிறேமச்சந்திரன், யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணன் ஆகியோரும், அரசியல் ஆய்வாளர்களான கே.ரி. கணேசலிங்கம், நிலாந்தன், யாழ்ப்பாணம் வர்த்தக சங்கத் தலைவர் ஜெயசேகரம், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதன்போது அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம், வடக்கு – கிழக்கு இணைப்பு, வடக்கில் இந்தியத் தரப்பின் செயற்பாடுகள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன என்று சந்திப்பில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர்.

## யாழ்.மத்திய கலாசார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை அரசின் பங்களிப்புடன் திறந்து வைப்பதற்கு உரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அத்தோடு திறந்து வைக்கப்பட்ட பின்னர் எதிர்வரும் ஐந்து வருடங்களுக்கு கட்டடத்தின் பராமரிப்பு செலவையும் இந்தியாவே பொறுப்பேற்கவுள்ளது.

இலங்கைக்கு இந்தியா பல்வேறுபட்ட உதவிகளை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது – என்றார்.

இதன்போது அவர் யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தைச் சுற்றிப் பார்வையிட்டார். அவருடன் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அவரது வருகையை முன்னிட்டு யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலைய வளாகத்தில் பாதுகாப்புகளும் இறுக்கப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்.பல்கலைக்கழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடந்த பத்து நாள்களுக்கு முன்னர் நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் சேர்ந்த அனைத்து வருடங்களிலும் இசைக் கருவியைப் பிரதான பாடமாகப் பயிலும் மாணவர்கள் கற்றல் செயற்பாட்டில் நேரடியாகப் பங்கேற்க வேண்டும் என்று யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தால் வலிந்து அழைக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதனால், மலையகம் உட்பட நாட்டின் வெவ்வேறு பகுதிகளையும் சேர்ந்த மாணவர்கள் யாழ்ப்பாணம் வருகை தந்து விரிவுரைகளில் பங்குகொண்டிருக்கின்றனர்.

அவர்களில் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் இருவர் தொற்று அறிகுறிகள் காணப்பட்ட நிலையில் துணைவேந்தர் ஊடாக சுகாதாரத் தரப்பினருக்குத் தகவல் வழங்கப்பட்டிருக்கின்றது.

குறித்த மாணவர்கள் இருவரையும் பொறுப்பேற்பதற்காக சுகாதாரத் தரப்பினர் மாணவர்கள் இருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்ட இணுவில் பகுதிக்குச் சென்றிருக்கின்றனர்.

இருந்தபோதிலும் மாணவர்கள் இருவரும் சுகாதாரத் தரப்பினருடன் நோயாளர் காவு வண்டியில் செல்வதற்கு மறுப்புத் தெரிவித்தனர் எனவும், தம்மை யார் அழைத்தாலும் செல்ல வேண்டாம் என்று தமது துறைத் தலைவர் தமக்கு அறிவுறுத்தினார் எனவும் சுகாதாரத் தரப்பினருக்கு மாணவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

அதன் பின்னர் மாணவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் அவர்கள் இருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து இசைத்துறை விரிவுரையாளர்களுக்கும் ஏனைய மாணவர்களுக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அவர்களின் பி.சி.ஆர். முடிவுகள் நேற்று வெளியாகியுள்ளன.

அவற்றின் அடிப்படையில், விரிவுரையாளர்கள் ஐவர் மற்றும் ஏற்கனவே தொற்றுக்குள்ளான இரு மாணவர்களுடன் நெருங்கிப் பழகிய நிலையில் தனிமைப்படுத்தலில் உள்ள மாணவர் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று தெரியவந்துள்ளது.

## நாளாந்தக் கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன உறுதிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர்களிடையே 18 பெண்களும், 22 ஆண்களும் அடங்குகின்றனர் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 30 வயதுக்குட்பட்ட பெண் ஒருவர் சாவடைந்துள்ளார். 30 முதல் 59 வயதுக்கு இடைப்பட்ட 8 ஆண்களும், 3 பெண்களும் அடங்கலாக 11 பேர் உயிரிழந்துள்ளனர். 60 வயதுக்கு மேற்பட்ட 28 பேரின் சாவுகள் பதிவாகியுள்ளன. அவர்களில் 14 ஆண்களும், 14 பெண்களும் அடங்குகின்றனர்.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 59 ஆக அதிகரித்துள்ளது.

## மாகாண சபைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அண்மையில் வெளியிட்ட அறிக்கைக் குறித்து தம்புள்ளையில் நேற்று செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

தேவையாயின் எதிர்க்கட்சி தலைவர், அவருக்கென்று தனியாக ஒரு தேர்தலை நடத்திக்கொள்ளட்டும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## நேற்று தொற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 20 ஆயிரத்து 430 ஆக எகிறியுள்ளது.

அத்துடன் நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து மேலும் 652 நேற்று குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 59 ஆயிரத்து 298 ஆக அதிகரித்துள்ளது.

## இலங்கையின் உண்மை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தியா – இலங்கை உறவுகளுக்கு புத்துயிர்ப்பு அளிக்கும் வகையில் பாதை வரைபடமொன்றை இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட உருவாக்கியுள்ளமை வரவேற்கத்தக்கது என்றும் சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தாருடன் நவராத்திரி விழாவில் பங்கேற்குமாறு தமக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என அவர் சில தினங்களுக்கு முன்னர் தனது ருவிட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பயணத்தின்போது இலங்கையின் பாதுகாப்பு படைகளைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகள் பங்கேற்கும் நிகழ்வொன்றில் தேசிய பாதுகாப்பு தொடர்பில் உரையாற்றவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# அதிவேக நெடுஞ்சாலை ஊடாக நாட்டை இணைக்கத் திட்டம்

## அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவிப்பு



வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கு பிரதேசங்களை அதிவேக நெடுஞ்சாலை ஊடாக இணைக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்பார்க்கிறார் என ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெற்காசிய பிராந்தியப் பணிப்பாளர் கெனிச்சி யோக்கோயமாவிடம் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நெடுஞ்சாலை அமைச்சர் பெர்னாண்டோவுக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெற்காசிய பிராந்தியப் பணிப்பாளர் கெனிச்சி யோக்கோயமாவுக்கும் இடையிலான சந்திப்பு அண்மையில் நெடுஞ்சாலை அமைச்சில் நடைபெற்றது.

இலங்கையின் கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டம், வீதிப் பாதுகாப்பு, போக்குவரத்து நெரிசல் முகாமைத்துவ திட்டமொன்றை புதிதாக ஆரம்பித்தல் மேலும் புதிய வீதி அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்தல் என்பன தொடர்பாக இதன் போது விரிவாக ஆராயப்பட்டது.

இலங்கையின் நெடுஞ்சாலை அபிவிருத்தித் திட்ட முன்னெடுப்பு தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெற்காசிய பிராந்தியப் பணிப்பாளர் இதன்போது வினவியதோடு இதற்குப் பதிலளித்த அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்குப் பிரதேச வீதிகளை நெடுஞ்சாலை ஊடாக இணைப்பதன் மூலமாக நாட்டை அபிவிருத்தியின் உச்சத்திற்கு கொண்டு செல்ல ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்பார்க்கிறார் எனக் குறிப்பிட்டார். அத்தோடு கிராமிய வீதி அபிவிருத்தி செயற்பாடுகள் வாயிலாக கிராமிய பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கு உந்து சக்தி அளிக்க இருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்காக பணிப்பாளர் சொன் வொன் இங்கு கருத்துத் தெரிவிக்கையில்,தெற்காசியாவில் சிறந்த நெடுஞ்சாலையாக தெற்கு அதிவேக நெடுஞ்சாலை அமைந்துள்ளதாகக் குறிப்பிட்டார். மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பணியாற்றிய காலப்பகுதியில் தற்போதைய ஜனாதிபதியின் செயலாளர் பீ.பீ.ஜெயசுந்தரவின் கோரிக்கைக்கு அமைவாக ஆரம்பிக்கப்பட்ட முன்னுரிமை வீதித் திட்டம் வெற்றியளித்தது. பங்களாதேஷ் மற்றும் இந்தியாவில் கிராமிய வீதி அபிவிருத்திக்காக இந்த மாதிரியே பயன்படுத்தப் படுவதாகவும் கலாநிதி சொன் வொன் குறிப்பிட்டார். சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்துக்கு அமைய ஒரு லட்சம் கிலோ மீற்றர் வீதி அபிவிருத்தித் திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் ஒரு லட்சம் மரக்கன்று நடும் திட்டம் என்பன தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகள் பாராட்டுத் தெரிவித்தனர்.

மேலும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்படும் துறைமுக பிரவேச வீதி தாமதமடைவது தொடர்பாகவும் ஆராயப்பட்டதோடு இந்த தாமதத்தைத் தடுக்கத் தேவையான தீர்மானங்கள் மற்றும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெற்காசிய பிராந்தியப் பணிப்பாளர் கெனிச்சி யோக்கோயமாவிடம் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

தற்போது இலங்கையில் வீதி அபிவிருத்தி முன்னேற்றம் மிக உயர்ந்த மட்டத்தில் இருப்பதால் எதிர்காலத்தில் இலங்கைக்கு உதவ ஆசிய அபிவிருத்தி வங்கி மிகவும் ஆர்வத்துடன் இருப்பதாக ஆசிய அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர், அமைச்சரிடம் கூறினார்.

நெடுஞ்சாலை அமைச்சில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெற்காசிய பிராந்தியப் பணிப்பாளர் கெனிச்சி யோக்கோயமா ஆகியோருடன் நெடுஞ்சாலை அமைச்சின் செயலாளர் ஆர்.டபிள்யு.ஆர்.பிரேமசிரி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைப் பணிப்பாளர் கலா நிதி சென் வொன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சட்டமேதை கலாநிதி நாகேந்திரா ஆஸ்திரேலியாவில் காலமானார்

நீதிபதிகளையும், சட்டத்தரணிகளையும் உருவாக்கிய சட்ட மேதை கலாநிதி திருமதி நாகேந்திரா ஆஸ்திரேலியாவில் காலமாகியுள்ளார்.

நீதிபதிகளையும், சட்டத்தரணிகளையும் உருவாக்கிய சட்ட மேதை கலாநிதி திருமதி நாகேந்திரா ஆஸ்திரேலியாவில் காலமான செய்தி சட்ட சமூகத்திற்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அவரது இழப்பு பேரிழப்பு என இலங்கை சட்ட சமூகம் தமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துள்ளது.

வடக்கு,கிழக்கில் கடமையாற்றும் அனைத்து நீதிபதிகளும் அவரது மாணவர்களென்பது பெருமைக்குரிய விடயம். அத்துடன் வடக்கு, கிழக்கு, கொழும்பு, கனடா, லண்டன், ஆஸ்திரேலியாவில் வாழும் பெரும்பான்மையான சட்டத்தரணிகள் அவரது மாணவர்களாவர்.



கொழும்பு பல்கலைக்கழக சட்டபீடம், சட்டக் கல்லூரி மற்றும் யாழ். பல்கலைக்கழக சட்டபீட விரிவுரையாளராகவும் பல ஆண்டுகள் கடமையாற்றியிருந்த நிலையில், அவரது ஆத்மா சாந்தியடைய அனைவரும் பிரார்த்திப்போமாக என தமது இரங்கல்களை தெரிவித்துள்ளது.

# ஆள்பதிவு திணைக்களத்தின் சேவைகள் இன்று ஆரம்பம்

*ஆள்பதிவு திணைக்களத்தின் சேவைகள் இன்று (திங்கட்கிழமை) முதல் ஆரம்பமாகவுள்ளன.*

*அதன்படி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டலுக்கமைவாக அனைத்து அலுவலகங்களிலும் இன்று முதல் பொது மக்களுக்கான சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.*

*எவ்வாறாயினும் ஒரு நாள் சேவை முன்னெடுக்கப்படாதென ஆள்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது.*

# வவுனியா கோவில்குளம் பகுதியில் வாள்வெட்டு; இருவர் படுகாயம்!

வவுனியா - கோவில்குளம் பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு இளைஞர் குழு ஒன்று, வீதியால் செல்பவர்களை வழிமறித்து வாள் மற்றும் கோடரிகளால் தாக்கியதில் இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மதுபோதையில் நின்றிருந்த மேற்படி நபர்கள் வீதியால் செல்பவர்களைத் தாக்கியமையுடன் வீடுகள் சிலவற்றிற்குள் புகுந்து உறங்கிக் கொண்டிருந்தவர்களையும் தாக்கியுள்ளனர்.

இதனால் பெண் உட்பட நால்வர் காயமடைந்த நிலையில் இருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபனுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

சம்பவ இடத்திற்குச் சென்ற அவர் நிலைமை தொடர்பாக ஆராய்ந்ததுடன் தாக்குதலை மேற்கொண்டவர்களை கைது செய்யுமாறு பொலிஸாருக்குப் பணித்தார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# அத்தியாவசிய சேவை உத்தியோகத்தருக்கு யாழிலிருந்து அக்கரைப்பற்றுக்கு பஸ் சேவை

கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் அத்தியாவசிய சேவை உத்தியோகத்தர்களின் வேண்டுகோளுக்கு அமைய யாழ்ப்பாணத்திலிருந்து அக்கரைப்பற்றுக்கான பஸ் சேவை நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இரவு 7 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பை இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய தலைமை முகாமையாளர் செ.குணபாலசெல்வம் விடுத்துள்ளார்.

இந்தப் பஸ்ஸில் பயணிக்கும் அத்தியாவசிய சேவை உத்தியோகத்தர்கள் தங்களது திணைக்கள அடையாள அட்டையை வைத்திருக்க வேண்டும் என்று அவர் கேட்டுள்ளார்.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி உத்தியோகத்தர்கள் தங்கள் பயணத்தை மேற்கொள்ளுமாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.


## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

## பகிரங்க ஏலவிற்பனை

**யாழ் மாநகரசபையின் 2020ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொருட் கணக்கெடுப்பில் விற்பனை என காட்டப்பட்ட பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை எதிர்வரும் 2021.10.21 ஆம் திகதி (வியாழக்கிழமை) காலை 11.00 மணிக்கு மாநகரசபை வளாகத்தில் நடைபெறவுள்ளது. பொருள்களை பார்வையிட விரும்புவோர் அன்றைய தினமே (2021.10.21) மு.ப.8.30 தொடக்கம் மு.ப 10.30 மணிவரை பொருட்களைப் பார்வையிட்டு ஏலத்தில் பங்கு பெற விரும்பின் மீளளிக்கப்படாத வைப்புத்தொகையாக ரூபா 500/= இனை செலுத்தி ஏலத்தில் பங்குபற்ற முடியும்.**

**முதல்வர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**


# ஹெரோயினுடன் சந்தேக நபர் மிரிஹானவில் வைத்துக் கைது

மிரிஹான பொலிஸ் பிரிவில் சிகேரா வீதி பிரதேசத்தில் நுகேகொடை குற்ற விசாரணைப் பிரிவினருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கமைய 5 கிராம் 470 மில்லி கிராம் ஹெரோயினுடன் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் 37 வயதுடைய தலவத்துகொட பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

குறித்த சந்தேகநபர் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணைகளில் தலங்கம பொலிஸாரால் தேடப்பட்டு வரும் பதிவு செய்யப்பட்ட சந்தேகநபர் என்பது தெரியவந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது,

மிரிஹான மற்றும் தலங்கம பொலிஸ் பிரிவுகளில் வீடுகள் பலவற்றில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் தேடப்பட்டு வந்த குறித்த சந்தேக நபரிடமிருந்த பல பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அதற்கமைய இரு தங்க வளையல்கள், தங்க மாலை, தங்க மாலையுடன் பதக்கம் , 3 ஜோடி தோடுகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. குறித்த சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக மிரிஹான பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பொருந்தாக் கூட்டுக்கள்

அரசியல் அனைத்துத் தரப்புகளிலுமே கீழ்த்தரமாகிவிட்டது. நேற்றைய, இன்றைய பத்திரிகைச் செய்திகள் அதற்கு நல்ல சாட்சியம்.

★ நிலையான தீர்வை வென்றெடுக்க எமக்குள் ஒற்றுமை மிக அவசியம் என வலியுறுத்துகின்றார் சம்பந்தன். கூட்டமைப்புக்குள் குழப்பம், முரண்பாடு என்ற பின்புலத்தில் அவர் இப்படிக் கோரிக்கை விடுக்கின்றார்.

★ அரசுக் கூட்டணிக்குள் குழப்பம் நீடிப்பு; மீண்டும் அணி சேரும் பங்காளிகள்! கொழும்பில் 5ஆம் திகதி முக்கிய கூட்டம்.

★ சஜித் அணிக்குள்ளும் மோதல். ஐக்கிய மக்கள் சக்தி ஐந்தாக உடையுமா? ஒரு தரப்பு ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு.

★ வெளியேற விரும்புவோர் வெளியேறலாம். பங்காளிக் கட்சிகளுக்கு பஸில் மறைமுகப் பதிலடி.

★ சதிகாரர்களை அரசிலிருந்து உடன்வெளியேற்ற வேண்டும் இராஜங்க அமைச்சர் ரொஷான் வலியுறுத்து.

★ அரசுக்குக் கூஜா தூக்கும் செயற்பாடுகளை முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் நால்வரும் கைவிட வேண்டும். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் ஆக்ரோஷம்.

– இவை எல்லாம் தேர்தலில் ஓரணியில் நின்று மக்கள் வாக்குகளைப் பெற்று பதவிகளை ஈட்டியதும், ஏணியை எட்டி உதைக்கும் அங்கிடுதத்தித்தனத்தின் பிரதிபலிப்புகள்தான்.

ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என்றில்லை. எல்லாப் பக்கத்திலும் இந்த நோய்தான்.

தமிழ்க் கட்சிகள், சிங்களக் கட்சிகள், முஸ்லிம் கட்சிகள் என்றில்லை. வடக்கு, கிழக்குக் கட்சிகள், தென்னிலங்கைக் கட்சிகள் என்றில்லை. எல்லாப் பக்கங்களிலும், எல்லா கட்சிகளிலும் இதுதான் நிலைமை.

கட்சிகள் சேர்வதும், கூட்டுக்களில் இணைவதும் கொள்கைப் பற்று, இலட்சிய இலக்கு என்பவற்றுக்காக அல்ல. பதவிகளை எப்படியும் அடைந்தாக வேண்டும் என்ற சிந்தனைப் போக்கின் வெளிப்பாடுதான். அதுவே, இந்த கட்சிகளில் போட்டிகள், பொறாமைகள், குழு மோதல்கள், அணிச் சண்டைகள், இழுபறிக்கும் காரணம்.

தேர்தலில் வெல்வதற்காக – பதவிகளைப் பிடிக்கும் சுயநலத்துக்காக – கூடாத கூட்டுக்கள் எல்லாம் கூடுகின்றன. சேராத தரப்புக்கள் எல்லாம் சேருகின்றன.

இந்தத் தரப்புகளுக்கு இலட்சியப் பற்றோ, கொள்கைகளோ, கோட்பாடுகளோ, சித்தாந்த இணக்கப்பாடோ கிடையவே கிடையாது. அவை எல்லாம் பார்த்து கூட்டுக்களை அமைப்பவை அல்ல இவை.


எந்தத் தரப்புடன் கூட்டுச் சேர்ந்தால், எவ்வளவு ஆசனங்களைக் கைப்பற்றலாம் என்ற மனக்கணக்கில்தான் முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

கொள்கைக் கோட்பாடுகளில் இணையாத – இணையவே முடியாத – தரப்புக்கள் கூட, அற்ப அரசியல் பதவி லாபத்துக்காக பொருந்தாத் திருமணம் போல கூட்டமைக்கின்றன. விளைவு விவாகரத்துப் போன்ற நிலைமைதான்.

இதுதான் நமது கட்சிகளுக்கு இடையில் – பெரும்பாலும் எல்லாக் கட்சிகள், கூட்டுக்கள் இடையில் – இப்போது நடந்தேறிக் கொண்டிருக்கின்றது.

# அரசுக்கு 'கூஜா' தூக்கும் செயற்பாடுகளை எம்மவர்கள் நால்வரும் கைவிடல் வேண்டும்

## ஹக்கீம் ஆக்ரோஷம்



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அரசாங்கத்துக்கு தாரைவார்ப்பதற்கு விரும்பவில்லை என்று தெரிவித்துள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் அந்த நான்கு உறுப்பினர்களும் அரசாங்கத்துக்கு 'கூஜா' தூக்கும் செயற்பாடுகளை முழுமையாகக் கைவிட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஊடகம் ஒன்றுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

20 ஆவது திருத்தச்சட்டத்துக்கு எமது கட்சியின் நான்கு உறுப்பினர்களும் ஆதரவாக வாக்களித்ததன் பின்னர் அதுபற்றிய பல்வேறு பேச்சுக்களை கட்சிக்குள் நடத்தியிருந்தோம். கட்சியின் தலைமையினதும், உயர்பீடத்தினதும், போராளிகளினதும் தீர்மானத்துக்கு மாறாக செயற்படக் கூடாது என்பதை வலியுறுத்திக் கூறியிருந்தோம். அதற்கு அந்த உறுப்பினர்களும் இணக்கம் கண்டனர்.

இதனைவிடவும், நாடாளுமன்றக் குழுக் கூட்டங்களின் போது கட்சிக்குள் பிளவுகள் என்ற அபிப்பிராயம் ஆதரவாளர்களுக்கும், மக்களுக்கும் சென்று குழப்பங்களை ஏற்படுத்தக் கூடாது என்பதற்காக நாடாளுமன்றத்தில் நடைபெறும் வாக்கெடுப்புக்களின் போது வாக்களிப்பதற்கு இணக்கமில்லாது விட்டால் ஆகக்குறைந்தது அதிலிருந்து தவிர்ந்து கொள்ளுமாறு அவர்களை அறிவுறுத்தியிருந்தேன். அவர்களும் அதற்கு இணக்கம் தெரிவித்திருந்தார்கள்.

ஆனாலும் புதிய நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் நிதிச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டபோது அவர்கள் அதற்கு ஆதரவாக வாக்களித்திருந்தார்கள். அதுபற்றி வினவிய போது, அவரால் ஒதுக்கீடு செய்யப்படும் அபிவிருத்தி நிதிகள் தமக்குக் கிடைக்காது போய் விடும் என்ற பீதியின் காரணத்தால் வாக்களித்தோம் எனக் கூறுகின்றார்கள்.

இந்த உறுப்பினர்கள் முதலில் அபிவிருத்தி என்ற மாயையில் இருந்து வெளிவர வேண்டும். கிழக்கு மாகாணம் உள்ளிட்ட அனைத்து முஸ்லிம்களும் இந்த ஆட்சியாளர்கள் மீது மிகுந்த வெறுப்படைந்துள்ளார்கள்.

அவ்விதமாக இருக்கையில் ஆட்சியாளர்களுக்கு 'கூஜா' தூக்குவதை எம்மவர்கள் முதலில் நிறுத்த வேண்டும். அவ்வாறு இல்லாது விட்டால் அவர்கள் அதற்குரிய விலையை நிச்சயம் கொடுக்க வேண்டி வரும்.

இந்த உறுப்பினர்களை அரசாங்கத்துக்கு தாரை வார்த்துவிடக்கூடாது என்பதற்காக நான் ஒழுக்காற்று நடவடிக்கை அல்லது கட்சியிலிருந்து அகற்றுதல் போன்ற கடுமையான தீர்மானங்களை இதுவரையில் எடுக்காது இருக்கின்றேன்.

ஆகவே, இவர்கள் கள யதார்த்தத்தினை புரிந்து கொண்டு, முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களுக்கான உரிமைகளை வென்றெடுப்பதற்கான கட்சி என்பதை உணர்ந்து கொண்டு அதிகாரங்கள், அமைச்சுப்பதவிகளுக்கு சோரம்போகாது தற்போதுள்ள இரண்டும் கெட்டான் நிலையைக் கைவிட்டு முடிவொன்றை அவர்கள் எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

# எரிபொருள் விநியோக பிரச்சினையைத் தீர்க்க ஓமானிடம் உதவிகோரும் இலங்கை அரசு!

இலங்கையின் எரிபொருள் விநியோக பிரச்சினையை தீர்ப்பதற்காக 360 கோடி டொலர் நிதியுதவியைப் பெற இலங்கை அரசாங்கம் ஓமான் அரசாங்கத்துடன் ஓர் உடன்பாட்டை எட்டவுள்ளது.

குறித்த நிதியுதவிக்கு ஓமான் அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளதாகவும் இரு நாடுகளும் இந்தத் திட்டத்தை தொடர கொள்கை ரீதியாக ஒப்புக்கொண்டதாகவும் அரசாங்கத்தின் உயர் மட்டத் தகவலை மேற்கோளிட்டு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போது வரையில் உள்ள இந்த ஒப்பந்தம் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐந்து வருட சலுகை மற்றும் 20 வருடங்களில் குறித்த கடனை திருப்பிச் செலுத்தும் வகையிலும் நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன எனவும் அறியமுடிகின்றது.

12 மாத காலத்துக்கு எரிபொருளை வாங்கும் வகையில் 360 கோடி டொலர் நிதி உதவி இலங்கை அரசாங்கத்துக்கு கிடைக்கும் என அரசாங்கத்தின் உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருப்பினும் இலங்கைக்கும் ஓமானுக்கும் இடையில் எந்தவோர் உடன்பாடும் எட்டப்படவில்லை எனக் குறிப்பிட்டுள்ள எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, நாட்டில் பெற்றோல் மற்றும் டீசல் தட்டுப்பாடு என்ற செய்தியில் உண்மையில்லை என்றும் குறிப்பிட்டார்.

அண்மையில் ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் இந்தியாவுடன் எரிபொருள் கொள்வனவிற்காக நிதியுதவியை வழங்குவது தொடர்பான பேச்சில் அரசாங்கம் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களை சந்திக்கின்றது ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழு



இலங்கை வந்திருக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழு உள்நாட்டுப் போரின் போது காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களை சந்திக்கத் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் நாள்களில் இந்தச் சந்திப்பு இடம்பெறும் என கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் அலுவலகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களுடனான சந்திப்பின்போது, காணாமல் போனவர்களைக் கண்டறிய அரசாங்கம் மேற்கொண்ட மந்தமான முயற்சிகள் தொடர்பில் கவலை வெளியிடப்பட்டது.

மேலும் காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணையில் அரசாங்கம் வெளிப்படையாக இழுத்தடிப்பை செய்கின்றது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்நிலையில் ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவின் விஜயம் ஒக்ரோபர் 5 ஆம் திகதி நிறைவுபெறுவதற்கு முன்னர், காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களை சந்திக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வந்துள்ள மேற்படி தூதுக்குழு, கடந்தவாரம் சிவில் சமூக குழுக்கள், எதிர்க்கட்சிகள், சிறுபான்மை சமூக பிரதிநிதிகள் மற்றும் வெளிவிவகார, தொழிலாளர் மற்றும் நீதி அமைச்சர்களையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

## எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

அங்கம் - 95

ந.வித்தியாதரன்

எஸ்.டி.சிவநாயகம் ஐயா பிறந்தது திருகோணமலை. அதுவே என் சொந்த இடமும் கூட. அதனால்தான் சிவநாயகம் ஐயாவும் என் தந்தையாரும் நெருங்கிய நண்பர்கள். என் தந்தையார் அவருக்கு மூன்று ஆண்டுகள் மூத்தவர். அதனால் 'நடேசபிள்ளை அண்ணன்' என்றுதான் என் தந்தையாரை அவர் அழைப்பார். என் தந்தையார் மீது அளவற்ற மதிப்பும் நட்பும் கொண்டிருந்தார் சிவநாயகம் ஐயா. அதுவே 'தினபதி'யில் நான் செல்லப்பிள்ளையாக, பலதும் பத்தும் படித்து வளர்வதற்கு வாய்ப்பைத் தேடித் தந்தது. குறுகிய காலத்தில் ஊடகத்துறையில் முன்னிலை பெறுவதற்கான ஓர் உந்துதலைத் தருவதற்கும் கூட அதுவே காரணமாக இருந்தது. சிவநாயகம் ஐயாவின் பெற்றோர்கள் அவர் சிறு வயதில் இருக்கும்போதே காலமாகிவிட்டனர். அதனால் திருகோணமலையை விட்டு நீங்கி, மட்டக்களப்பில் இருந்த தம் சின்னம்மா – சித்தப்பாவாகிய செல்லப்பா வாத்தியார் தம்பதியரின் அரவணைப்பில் வளர்ந்தார் சிவநாயகம். இதுதான் திருகோணமலையில் பிறந்த சிவநாயகம் மட்டக்களப்பு மண்ணின் மைந்தரான பின்னணி. மட்டக்களப்பில் நிலை கொண்டாலும் தொடர்ந்து தமது சொந்த இடமான திருகோணமலையின் ஊடாட்டத்தை அவர் விடவில்லை. திருகோணமலை மண் மீது பற்றும் பாசமும் வைத்திருந்தார்.


சிறுவயதில் தாய், தந்தையை இழந்த எஸ்.டி.எஸ். ஐயாவை மட்டக்களப்பில் அரவணைத்து வளர்த்த சித்தப்பாவாகிய செல்லப்பா வாத்தியார்.

**********

அவர் புதிய மிலேனியம் பிறந்து நான்கு மாதங்களில் நம்மை விட்டுப் பிரிந்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் 'தினக்குரல்' நாளிதழ் தனது ஆசிரிய தலையங்கத்தில் பத்திரிகை உலகின் 'மூன்றாவது கண்' சிவநாயகம் என்று புகழாரம் சூட்டியது. உண்மையில் பத்திரிகை உலகில் அவர் நெற்றிக் கண்தான். அந்த நெற்றிக் கண்ணைத் திறந்து, தீக்கனலில் அவர் எழுத்து வடிப்பாராயின் அது நெருப்பாய்ச் சுடும். ஆணியாய்த் தைக்கும். அம்பாய்க் குத்தும். ஆப்பாய் இறங்கும்.


சின்னம்மா திருமதி செல்லப்பா.

அமைதியும் அடக்கமும் சிந்தனைத் தெளிவும் நிறைந்த எழுத்துக்களின் மூலம் மக்களின் 'உள்ளம் கவர்கள்வனாக' முடிந்த சிவநாயகம் ஐயா, தமிழ் ஊடகத் துறையின் 'பிரம்மரிஷி' என்று பெருமைப் படுத்துகின்றது தினக்குரல். அந்த தலையங்கத்தை இன்று பார்ப்போம். –

**பத்திரிகை உலகின்**
**'மூன்றாவது கண்'**
**எஸ்.டி.சிவநாயகம்**

தமிழுக்காகவும், தமிழ் மக்களுக்காகவும் ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலமாக உயிர் மூச்சுடன் பேசியும், எழுதியும், புதிய தலைமுறையைப் புடமிட்டு வளர்த்தும் வந்த எஸ்.டி.சிவநாயகம் தமிழ் கூறும் நல்லுலகத்தின் மனச்சாட்சியாக வாழ்ந்து வந்த ஒரு மனிதர்!

பல கோடி தமிழ் நெஞ்சங்களில் 'சுதந்திரன்' பத்திரிகைக் காலம் முதலாகத் தமது உணர்வூட்டும் எழுத்துக்களால் தடம் பதித்த முதிர்ந்த பத்திரிகையாளர் பத்திரிகைத் துறையையே தமிழ் மணம் கமழும் ஆலமரமாக்கியமை பெரிய வரலாறு!

அவரின் பயிற்சிப் பட்டறையினூடாக வெளிவந்து பேனா பிடித்தவர்கள் யாவரும் பழைமைக்கும் புதுமைக்கும் பாலமமைக்கும் பெருவிழுதுகளாகியுள்ளனர். செய்தித்துறை என்ற வரம்பைக் கடந்து இலக்கியம், கலை, கலாசாரம் ஆகிய பல்வேறு துறைகளின் மலர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் எஸ்.டி.சிவநாயகம் வழிகாட்டியாக விளங்கினார்.

சுதந்திரன் பத்திரிகைக் காலம் முதல் எஸ்.டி.சிவநாயகம் பதித்த தடங்களைக் கூர்மையாக அவதானிக்கும் போது அவர் தம்மைக் கூர்மையான, "அரசியல் பத்திரிகையாளராக" இனங்காட்டி வந்தமையைத் தமிழ் கூறும் நெஞ்சங்கள் ஒரு பொழுதும் மறக்கமுடியாது.

தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் ஒரு இலட்சியப் போர்வீரனாக விளங்கி, சுதந்திரன் பத்திரிகை மூலம் தமது "பேனா முனை" என்ற ஆயுதத்தால் தமிழனின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும், தமிழ் மொழி வளத்தோடும் வளர்ச்சியோடும் விளங்க வேண்டும் என்பதைப் பின்னர் உடல்நலக் குறைவுற்ற சந்தர்ப்பங்களிலும் கூட உதார உணர்ச்சியோடு சிந்தித்த இலட்சிய புஷரூர் மறைந்துவிட்டார்!

நாடு எதிர்நோக்கிய நெருக்கடியான காலங்களில் எல்லாம், தமிழ்ப் பத்திரிகைகள் தமிழ் பேசும் மக்களுக்கு வாளாகவும், கேடயமாகவும், உரிமைக் குரலாகவும் விளங்க வேண்டும் என்பதைத் தமது வாசிப்புகள் மூலமும், கருத்து வெளிப்பாடுகளின் மூலமும் உணர்த்துவதற்கு எஸ்.டி.சிவநாயகம் என்றுமே தவறவில்லை .

சுதந்திரன் பத்திரிகை மூலம் தமது எழுத்து வாழ்வை ஆரம்பித்த அமரர் எஸ்.டி.சிவநாயகம் வீரகேசரி, தினகரன் ஆகிய தேசியப் பத்திரிகைகளின் ஆசிரிய பீடத்திலும் பணியாற்றினார். இலங்கையின் புகழ்பூத்த பத்திரிகையாளராகிய டி.பி.தனபாலவுடன் இணைந்து தவஸ நிறுவனத்தின் வெளியீடாக தினபதி, சிந்தாமணிப் பத்திரிகையை உருவாக்கித் தமிழ் பத்திரிகைத் துறையில் புதிய களத்தையும், பத்திரிகை எழுத்து மரபையும் செழுமையடைய வைத்தார்.

சுதந்திரன் காலத்தில் பத்திரிகை உலகிலே விறுவிறுப்பான உணர்ச்சி நடை மூலம் பரப்பான வாசகர் கூட்டத்தை எழுச்சி பெற வைத்த நிலையில் இருந்து வேறுபட்டு, ஆணித்தரமான அரசியல் கருத்துக்களையும், இலக்கிய சர்ச்சைகளையும், சுவையான விடயங்களையும் வாசகர்களின் மன உணர்வுகளை அறிந்து வெளிப்படுத்தியமை பத்திரிகை உலகிலே புதிய பரிமாணங்களைத் தோற்றுவித்தது.

அறிவு, ஆற்றல், பலம், ஆளுமை, துணிவு ஆகியன பத்திரிகையாளர்களின் எழுச்சிக்கான ஆணிவேர் என்பதை, பத்திரிகைக் கலாசாரம் இடையிடையே தறிகெட்ட பாதையில் காலடி எடுத்து வைக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் "மூன்றாவது கண்ணாக" வெளிப்பட்டு, பத்திரிகை உலகம் தடம்புரளக் கூடாது என்பதைக் கூர்மையாக உணர்த்தி வந்த இலட்சியப் புருஷர்தான் எஸ்.டி.சிவநாயகம்.

ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில் எஸ்.டி. சிவநாயகம் அவர்களால் இனங்காணப்பட்டு இன்று நிமிர்ந்து நிற்கும் எழுத்தாளர்கள் அவரது அரவணைப்பை அடிக்கடி நினைவு கூர்வதில் பெருமிதம் அடைவது வரலாறாகியுள்ளது.

தனது இறுதி மூச்சு வரை ஒரு தன்னடக்கம் நிரம்பிய மனிதராக, தமது ஆளுமையைப் பேணிவந்த அமரர் எஸ்.டி. சிவநாயகம், இலக்கியப் புலமை வாய்ந்தவர். திராவிட முன்னேற்றக் கழக எழுத்துகளில் ஆரம்ப காலங்களில் தமது மனதைப் பறிகொடுத்தவராகி, எழுத்துக்களில் உணர்ச்சிகளைக் கொட்டினாலும், பின்னர் அமைதியும் அடக்கமும் சிந்தனைத் தெளிவும் நிறைந்த எழுத்துக்களின் மூலம் மக்களின் 'உள்ளம் கவர்கள்வனாக' விளங்கியமையும், தமிழ் கூறும் நல்லுலகத்தின் நெஞ்சத்தடங்களில் நுழைந்தமையும் தமிழ் நெஞ்சங்களில் இருந்து இலேசாக அகலமாட்டாது!

இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கம், இந்த நாட்டுப் பத்திரிகையாளருக்கான உயர் விருதுகளை நிர்ணயிக்கும் குழுவில் எஸ்.டி.சிவநாயகம் அவர்களை இணைப்பதன் மூலம், தமிழ்ப் பத்திரிகைத் துறையை மட்டுமல்ல, அவரையும் தன்னையும் கூடப் பெருமைப்படுத்திக் கொண்டது.

தினக்குரல் பத்திரிகை, தமிழ் கூறும் நல்லுலகில் தடம் பதிக்க முற்பட்ட காலம் முதல் ஒவ்வொரு அசைவிலும், எஸ்.டி. சிவநாயகம் அவர்கள் அனுக்கத் துணைவராகவும், வழிகாட்டியாகவும், புதிய பத்திரிகையின் செல்நெறியைக் கனம் காத்திரமான இலக்குகளுடன் இட்டுச் செல்வதற்கு ஆதார சுருதியாகவும் இருந்தமை பதிவு செய்யப்பட வேண்டியதொன்றாகும்.

தமிழ் ஊடகத்துறையின் பிரம்மரிஷியாக" விளங்கியவர் எஸ்.டி.சிவநாயகம். பட்டங்களையும், பரபரப்புகளையும், தம்மையறியாதவர் புகழ்வதையும் விரும்பாத ஒரு அன்பு இதயம் கொண்ட மாமனிதர். எழுத்துத் துறையிலும், தொடர்பு சாதனத்துறையிலும் வல்லமை நிறைந்த ஒரு தீர்க்கதரிசியாக எழுச்சி பெற்ற வரலாறு தமிழ் கூறும் நல்லுலகின் வரப்பிரசாதமாகியுள்ளது.


தமிழ் ஊடகத்துறையின் 'பிரம்மரிஷி'

வாழ்வின் நிறைவைச் சத்தியசாயி பாபாவின் ஆத்மீக வழிபாட்டோடு இணைந்து இறைதொண்டுடன் தம்மை இணைத்த புகழ்பூத்த பத்திரிகையாளரின் மறைவு ஒவ்வொரு தமிழ் நெஞ்சையும் நெருடும் நிகழ்வாகிவிட்டது. அவரின் ஆத்மா சாந்தியடைவதாக!

சிவநாயகம் ஒரு சாதாரண தமிழ்ப் பத்திரிகையாளர் அல்லர், இந்த நாட்டின் தமிழ் தேசிய அரசியலுக்கு வித்தூன்றிய சொல்லேர் உழவன் என்பதோடு பேனா முனையை வலுப்படுத்திய பேனா மன்னன் என்பதுதான் பொருத்தமானது .

(வளரும்....)




- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**அங்கம் - 150**



சீலன்

### 392. அமிர்தலிங்கம் தொடர்ந்தும் தேர்தலில் நிற்பது என்றுதான் தீர்மானித்தாரா?

மே 8ஆம் திகதி இந்தச் சம்பவம் நடந்தது. மே 11 ஆம் திகதி கூட்டணியின் மத்திய குழு நடப்பவைகளையும் அமிர்தலிங்கத்திற்கு எதிரான இந்தச் சம்பவத்தையும் விவாதித்தது. அவரோ "நாங்கள் துவக்குகளைக் கண்டு பயப்படவில்லை, சாவு ஒருமுறைதான் வரும். அது இப்பவும் வரலாம். அதை நான் ஏற்பேன். மக்கள் தீர்மானிக்கட்டும். அவர்களது தீர்ப்பை ஏற்பேன். அவர்களை விட்டு ஓடிவிடமாட்டேன். தம்பிமார் இவற்றை மக்களுக்கு முன் எடுத்துச் செல்லட்டும்" - என்றார். தேர்தல் அன்று விடுதலைப் புலிகள் காலை முதல் அசம்பாவிதங்கள் செய்யவில்லை. ஆனால் மக்கள் அடித்துப் பிடித்து வாக்களிக்க வரவில்லை. பயம் இருந்தது.

அதனை நியாயப்படுத்துவது போல் வாக்களிப்பது முடிவதற்கு ஒரு மணித்தியாலயத்துக்கு முன் சீலனும் செல்லக்கிளியும் பொன்னம்மானும் இன்னும் ஒருவருடன் சைக்கிளில் வந்து, கந்தர்மடம் சைவப்பிரகாச பாடசாலையில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச் சாவடிக்குள் நுழைந்தனர். சீலன் சென்று ஒரு கைக்குண்டை உள்நோக்கி எறிந்ததில் இராணுவத்தின் ராஜரட்ட துப்பாக்கிப் படைப் பிரிவில் இருந்து பாதுகாப்புக்கு நின்ற இராணுவ வீரர் ஜயவர்தன உயிரிழந்தார். அவருடன் இருந்த மற்ற இருவர் சிறிது காயமுற்றாலும் உள் ஓடிச்சென்று பதுங்கி, இவர்களை நோக்கிச் சுட ஆயத்தப்பட செல்லக்கிளி ஓடிச் சென்று அவர்களைத் தாக்கி ஒருவரிடம் இருந்த ரி56 இயந்திரத் துப்பாக்கியைப் பறித்துக் கொண்டு ஓடினார். இது அவர்களுக்கும் பிரபாகரனுக்கும் பெருமிதம் தந்த முதலாவது ரி 56 இயந்திரத்



பொன்னம்மான்




செல்லக்கிளி

துப்பாக்கி. அவர் அதனை வாஞ்சையோடும் பெருமிதத்தோடும் தடவிப் பார்த்து ரசிக்க, அச்செயலுக்குப் பழிவாங்குவதற்கு ராஜரட்ட துப்பாக்கிப் படைப் பிரிவு இராணுவ டிரக் வண்டிகளில் சம்பவம் நடந்த இடங்களுக்குச் செல்ல, வாக் குப் பெட்டிகள் யாழ்ப்பாண கச்சேரிக்கு எண்ணப்படுவதற்காகச் சென்று கொண் டிருந்தன.

கந்தர் மடத்தில் இராணுவம் நெருப்பு வைத்து, 64 வீடுகள், மினி பஸ்கள், கார்கள், சைக்கிள்கள் என எரித்து, மக்களைத் தாக்கிச் சூறையாடினர். ஜே.ஆர். ஊரடங்கை அறிவித்தாலும் இரவிரவாக இந்தப் பொதுமக்களுக்கு எதிரான அட்டூழியம் தொடர்ந்தது. பின் ராஜரட்ட துப்பாக்கிப் படைப் பிரிவு அனுராதபுரம் திருப்புமாறு பணிக்கப்பட்டது. திரும்பும் வழியில் அட்டூழியங்கள் அனுராதபுரத்தில், யாழில் இருந்து கொழும்பு சென்ற புகைவண்டிகளில் தமிழ் மக்களைத் தாக்கி வன்முறைகள் தொடர்ந்தன.

இது ஜே.ஆரினதும் அவரது நெருங்கிய சகாக்களினதும் திட்டமிடப்பட்ட "தமிழ் மக்களுக்குப் பாடம் படிப்பிக்க வேண்டும்" (Collective Punishment ) என்று அவர்களுக்கிடையேயிருந்த கையேட்டின் அத்தியாங்களின் நடைமுறைத் தொடக்கம்.



ஜே.ஆர்.

அவற்றை இனப்படுகொலை என்ற முறையில் புரிந்துகொள்ள சில சம்பவங்களுக்கு பின்நோக்கிச் செல்ல வேண்டும்.

ஆம், தேர்தல் முடிவுகள் கூட்டணிக்குப் பாரதூரமான ஏமாற்றமாக இருந்தது. சராசரி ஐந்து வீதம் தன்னும் வரவில்லை. பிரதேச சட்டத்தை ஜே.ஆர்.அமுல்படுத்தவில்லை என்பதால் மக்கள் நம்பிக்கையிழந்தார்கள் என்றார் அமிர்தலிங்கம். துப்பாக்கிகளுக்குப் பயந்து மக்கள் வாக்களிக்க வரவில்லை என்றார்.

கோவை மகேசன், ஈழவேந்தன் போன்றோர் அமிர்தலிங்கம் மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டார், சொன்னபடி தலைமையிலிருந்து விலகி, அரசியலிலிருந்து ஓய்வு பெறவேண்டும் என அறிக்கைகள் தந்தனர்.

இத்தகைய தோல்விக்கு துவக்குகள் மக்களைப் பயப்படுத்தினவா அல்லது கூட்டணியின் இயலாத்தனத்தினால் மக்கள் விரக்தியடைந்தார்களா என்பது பேசும் பொருளாகவே இருக்கும். மக்களிடமிருந்து பெறப்பட்ட சில செவ்விகளிலோ அவர்கள் கூட்டணியினர் தங்களது 1976 தேர்தலில் விஞ்ஞாபனத்தில் சொல்லியபடி தமிழ்ஈழம் அமைப்பதற்காக, தமிழ்மக்களின் குடியரசு சட்டசபையை (Constituent Assembly) கூட்டாமல் காலம் வரும்போது செய்யலாம் என்றும், புலம்பெயர் மக்களிடம் செய்யச்சொல்லி ஆதரவு தருகிறேன் என்று தீர்மானங்கள் போட்டுக்கொண்டிருக்கிறார்களே ஒழிய, வேறொன்றும் செய்கிறார்கள் இல்லை, பொடியன்கள் ஏதாவது துணிச்சலாக நின்று ஆமிக்காரனுக்கு படிப்பிக்கிறான்கள் என்று அபிப்பிராயப்பட்டனர்.



அமிர்தலிங்கம்

எப்படியோ தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மக்களால் ஓரம் கட்டப்பட்டவர்களாக கருதப்பட்டனர்.

ஜே.ஆரும் உங்களுக்கு வாக்குப் பலம் இல்லை, பயங்கரவாதிகள் இருக்கும் போது பேசியும் உங்களால் அதனைநடைமுறைப்படுத்த முடியாது, ஆகவே முதலில் இந்தப் பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டும், அதன் பின்னர் உங்களோடு பேசலாம் என்று இராமன் இராவணனுக்குச் சொன்னமாதிரி "இன்று போய் நாளை வா" - என்றார்.

(வளரும் ......)

# ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதலுக்கு ஜே.வி.பியும் அநுரவுமே பொறுப்பு!

## பொதுபல சேனா இப்படிக் கருத்து



ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்துக்கு மக்கள் விடுதலை முன்னணியும், நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்கவும் ஒரு வகையில் பொறுப்புக் கூற வேண்டும்.

அடிப்படைவாதக் கொள்கையால் ஈர்க்கப்பட்டவர்களுக்கு மக்கள் விடுதலை முன்னணி அரசியல் ரீதியில் பாதுகாப்பு வழங்கியுள்ளது. இலங்கையை இஸ்லாமிய இராச்சியமாக மாற்றியமைக்கும் ஒப்பந்தத்தின் பிரகாரம் செயற்படுவதை மக்கள் விடுதலை முன்னணி தவிர்த்துக் கொள்ள வேண்டும் என சுட்டிக்காட்டி பொதுபல சேனா அமைப்பு மக்கள் விடுதலை முன்னணிக்கு பகிரங்க கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

பல்லாயிரக்கணக்கான இளம் தலைமுறையினரைக் கொன்று அதனூடாக அரசியலுக்கு பிரவேசித்த மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க நாட்டில் மீண்டும் இனவாத முரண்பாடுகள் தலைதூக்குவதற்கு விரும்பவில்லை என்று குறிப்பிட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

இஸ்லாமிய அடிப்படைவாதம் வலுப் பெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கியதை பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் பல முறை ஆதாரபூர்வமாக வெளிப்படுத்தியுள்ளார். இந்த விடயம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணியினர் எவ்வித மறுப்பும் தெரிவிக்கவில்லை.

மக்கள் விடுதலை முன்னணியின் வரலாற்றை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். இவர்கள் ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் சம்பவத்துக்குப் பொறுப்புக் கூற வேண்டும். இப்ராஹிமிற்கு அரசியல்ரீதியில் ஆதரவு வழங்கி அடிப்ப டைவாதத்தை மக்கள் விடுதலை முன்னணி பாதுகாத் தது.

மக்கள் விடுதலை முன்னணியுடன் இப்ராஹிம் அவரது குடும்பத்தார் மாத்திரம் தொடர்பு கொள்ளவில்லை என்பதை பொதுபல சேனா அமைப்பு ஆதாரபூர்வமாக வெளியிட்டுள்ளது. மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவுடன் தோற்றம் பெற்றுள்ள ஐக்கிய மக்கள் சக்தியில் அடிப்படைவாதக் கொள்கையால் ஈர்க்கப்பட்ட பலர் உள்ளனர்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்று மூன்று மாதத்துக்குப் பிறகு மக்கள் விடுதலை முன்னணி இஹ்வான் முஸ்லிம் தரப்பினர், நல்லாட்சிக்கான தேசிய அமைப்பு மற்றும் ஜமாதே இஸ்லாம் மற்றும் 29 முஸ்லிம் அமைப்புக்களை ஒன்றிணைத்து 'தேசிய மக்கள் சக்தி ' உருவாக்கப்பட்டது.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஜமாதே இஸ்லாம் அமைப்பை 'முஸ்லிம்களை அடிப்படைவாதிகளாக்கும் ஒரு செயற்திட்டம்' என்றே கருதுகிறது. இந்த அமைப்பினிடம் பெருந்தொகையிலான ஆயுதங்கள் இருக்கின்றமையும், முஸ்லிம் இளைஞர்களுக்கு அடிப்படைவாத போதனைகளை வழங்கியுள்ளமையும் அறிய முடிந்துள்ளது.

நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் அடிப்படைவாதச் செயற்பாடுகள் தொடர்பில் 'ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில்' 2015 ஏப்ரல் 15 ஆம் திகதி எம்.எல். ஏ.எம்.ஹிஸ்புல்லாவின் அனுசரணையுடன் காத்தான்குடியில் முஸ்லிம் நூதன சாலை திறந்து வைக்கப்பட்டது.

இந்த நூதனசாலையின் நிர்மானிப்புக்கள் இஸ்லாமிய கோட்பாடுகளுக்கு விரோதமானது என நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி குறிப்பிட்டதாகக் தெரிவிக்கப்படுகின்றது.

2015 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலுக்கு முன்னிலையான அரசியல் கட்சிகளுக்கு பயங்கரவாதி சஹ்ரான் உள்ளிட்ட தேசிய தௌஹீட் ஜமாதேவால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி சார்பில் அப்துல் ரஹ்மான் இணக்கம் தெரிவித்தார்.

இலங்கையை இஸ்லாமிய இராச்சியமாக மாற்றும் ஒப்பந்தத்தின் பிரகாரம் பௌத்த மதத் தலைவர்களுக்கு எதிராகக் கருத்துரைப்பதை முதலில் தவிர்த்துக் கொள்ள வேண்டும். என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 'நைஜீரியன் ஸ்காம்' பண மோசடி சம்பவம்; 44 நைஜீரியர்களை நாடு கடத்தத் திட்டம்

'நைஜீரியன் ஸ்காம்' எனும் பெயரால் பரவலாக அறியப்படும், நைஜீரியர்களால் முன்னெடுக்கப் படும் பண மோசடிகள் தொடர்பான சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், அவற்றுடன் தொடர்புபட்ட அனைத்து நைஜீரியர்களையும் நாடு கடத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில் இவ்வாறான பண மோசடிகளுடன் தொடர்புடைய சுமார் 44 பேர் வரை, வெளிநாட்டவர்களைத் தடுத்து வைக்கும் மிரிஹானை திறந்தவெளி தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், அவர்கள் அனைவரையும் நாடு கடத்த தற்போது தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் உயர் மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்காக இலங்கை அரசாங்கத்தின் செலவில் விமானம் ஏற்பாடு செய்யப்படவுள்ளதாகவும் அறிய முடிகிறது.

அரசின் செலவில் இந்த நைஜீரியர்களை நாடு கடத்த சுமார் 41லட்சம் ரூபா வரை செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ள நிலையில், அந்தத் தொகையில் 80 வீதத்தை பொலிஸ் மா அதிபர் நிதியத்திலிருந்து வழங்க பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்ன இணக்கம் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இதுவரை நைஜீரியர்களின் நிதி மோசடி தொடர்பில் 44 சந்தேக நபர்கள் கைதாகி தடுப்பு முகாமில் உள்ள போதும் அவர்களில் 24 பேருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ள நிலையில், அவர்களை நாடு கடத்துவது தொடர்பில் சிக்கல் நிலவுவதாக அறிய முடிகிறது.

எனவே அந்த 24 பேர் தொடர்பிலும் சட்ட மா அதிபரின் ஆலோசனையைப் பெற்று, நாடு கடத்தல் நடவடிக்கைகளை விரைவுபடுத்த பேசப்பட்டு வருவதாக குடிவரவு குடியகல்வு திணைக்கள உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நைஜீரியர்களை நாடுகடத்தும் நடவடிக்கைகளில், அவர்களை அழைத்துச் செல்ல விமான சேவைகள் பின் வாங்கும் நிலையில், ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தின் விமானத்தில் அழைத்து செல்வது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அவசியம் ஏற்படுமாயின் இலங்கை விமானப்படையும் விமானவசதியை வழங்க முன் வந்துள்ளதாகத் தெரிகிறது.

கடந்த நான்கு மாதங்களில் இவ்வாறான மோசடிகள் தொடர்பில் 170 முறைப்பாடுகள் வரை கிடைக்கப் பெற்றுள்ளன எனவும், பண மோசடிக்கு உள்ளானவர்களில் வைத்தியர்கள், உள்ளிட்ட சமூகத்தில் உயர் மட்டத்தில் இருக்கும் பலர் அடங்குகின்றனர் எனவும் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாட்டில் 94 நைஜீரியர்கள் தங்கியுள்ள நிலையில், தங்களை பிரித்தானிய பிரஜைகளாகக் காட்டிக் கொண்டு பல்வேறு உத்திகளைக் கையாண்டு பண மோசடிகள் இடம் பெற்றுள்ளன என சி.ஐ.டி தகவல்கள் வெளிப்படுத்தியுள்ளன.

பணம், தங்க நகைகள், பெறுமதியான பரிசில்களை அனுப்பியுள்ளதாகவும் அதனை சுங்கத்திலிருந்து விடுவிக்கவெனக் கூறி 7 ஆயிரத்து 500 ரூபா முதல் பல்வேறு பெறுமதிகளைக் கூறி இவ்வாறு பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது. இந்த மோசடிகளில் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், ஆசிரியர்கள் என சமூகத்தின் உயர் நிலையில் உள்ள பலரும் சிக்கியுள்ளமையுடன் இது தேசிய பாதுகாப்பையும் பாதிக்கும் என அவதானிக்கப்பட்டுள்ளதால் நாடு கடத்தும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புத்தாக்க அரங்க இயக்கத்தின் பன்னாட்டு அரங்க கதையாடல்

புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் இணைய வழி பன்னாட்டு அரங்க கதையாடல் 04 நிகழ்வு இன்று 4 ஆம் திகதி திங்கட்கிழமை மற்றும் 05,06,07 ஆகிய திகதிகளில் இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.கும ரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் இன்று திங்கட்கிழமை பேராசிரியர் அ.மங்கை (தமிழ்நாடு,இந்தியா) 'ஒடுக்கப்பட்டோருக்கான அரங்கு' 05.10.2021 செவ்வாய்க்கிழமை பா.வை.ஜெயபாலன் (லண்டன்) 'நாடகத்துறையில் மாணவர்களை ஊக்கப்படுத்துவதில் மகாஜனக்கல்லூரியின் பங்கு' 06.10.2021 புதன்கிழமை நடன நாடகத்துறை சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத் தலைவர், கிழக்குப்பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி ஜெயரஞ்சினி ஞானதாஸ் அரங்கு 'வேரைப்பலப்படுத்தலும் உலகுடன் கலத்தலும்' 07.10.2021 வியாழக்கிழமை கருஞ்சுழி முனைவர் வ.ஆறுமுகம் பேராசிரியர்மேனாள் புல முதன்மையாளர் நிகழ்கலைப் பள்ளி புதுவைப் பல்கலைக்கழகம் நிறுவுனர் இயக்குநர் தலைக்கோல் நாடகக்குழு பாண்டிச்சேரி (தமிழ்நாடு, இந்தியா) 'நடிகர்களுக்கு அனுமதி இல்லை' நாடக அரங்க ஆக்க அனுபவங்கள் ஆகிய விடயங்களில் கதையாடவுள்ளனர்.

ஏற்புரையை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன் வழங்கவுள்ளார்.

இந்த இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 647334 826கடவுச் சொல் itm ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

# இரண்டு கொவிட் தடுப்பூசிகளும் பெறாதோர் திருமண நிகழ்வுகளில் பங்குபற்ற முடியாது!

## திருமண சேவைகள் சங்கம் எச்சரிக்கை

எதிர்வரும்நாளகளில் திருமண நிகழ்வு மண்டபங்களுக்குள் நுழைய, இரண்டு கொவிட் தடுப்பூசிகளையும் பெறாத நபர்களுக்கு அனுமதி மறுக்கப்படலாம் என திருமண சேவைகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் 16ஆம் திகதி முதல் 50 விருந்தினர்களுடன் திருமண நிகழ்வுகளை நடத்துவதற்கு சுகாதாரப் பிரிவு அனுமதி வழங்கியுள்ளது.

சுகாதார அமைச்சின் அனுமதியை முன்னெடுத்து செல்வதற்கும், சந்தர்ப்பத்தை பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு சங்கத்தின் அதிகாரிகள் ஹோட்டல் உட்பட அனைத்துத் தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தடுப்பூசிகளை நிராகரிக்கும் 20, 30 வயதுக்குட்பட்டவர்களுக்கு இந்த கட்டுப்பாடு பாதிப்பை ஏற்படுத்தும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.


# சிறுவர்களுக்குத் தடுப்பூசி செலுத்துவதை ஊக்கப்படுத்துமாறு பெற்றோரிடம் கோரிக்கை

அனைத்து பெற்றோர்களும் தங்கள் சிறுவர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதை ஊக்கப்படுத்துமாறு குழந்தைகளுக்கான லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையின் குழந்தை நல வைத்தியர் தீபால் பெரேரா கேட்டுக்கொண்டுள்ளார்.

நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 83 வீதமானவர்களுக்கு தடுப்பூசி செலுத்த அரசு திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

12 முதல் 19 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்காக பைசர் தடுப்பூசிகளை ஏற்றும் நடவடிக்கை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், தங்கள் சிறுவர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதை ஊக்கப்படுத்துமாறு அனைத்து பெற்றோர்களுக்கும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.



- எஸ். அன்ரனி நோர்பேட் -
(முன்னாள் சிரேஷ்ட பேராசிரியர்,
கொழும்புப் பல்கலைக்கழகம்)

# இலங்கையில் புவிநடுக்கங்களும் பாரிய நீர்த்தேக்கங்களும்

## ஓர் எதிர்காலவியல் நோக்கு


(நேற்றைய தொடர்ச்சி)

புவியோட்டு விருத்திக்குரிய தகட்டு எல்லைகளில் ஏற்படும் விருத்தியே இதற்குக் காரணம் என சில புவிச்சரிதவியல் விஞ்ஞானிகள் குறிப்பிட்டனர். ஆனால் அவ்வாறு இருப்பதற்கு வாய்ப்புக்கள் இல்லையெனவும், சிறிய தகடுகளின் விருத்தியினால்தான் இவை ஏற்படுகின்றதா என்பதும் தெளிவற்றதாக உள்ளது என 'பொன்னான்டோ' என்பவர் குறிப்பிட்டார். புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தில் கடந்த மாதம் 2021 செப்டெம்பர் 23 இல் இடம்பெற்ற சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியைத் தொடர்ந்து இடம்பெற்ற கலந்துரையாடலில் 'இலங்கை மத்திய பகுதிகள் உட்பட பல பகுதிகளில் அவ்வப்போது ஏற்பட்டு வரும் சிறிய நிலநடுக்கங்கள் காரணமாக எதிர்காலத்தில் இலங்கையில் பாரிய நில நடுக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்புக் குறைவாகவே உள்ளது' என இலங்கைப் புவிச்சரிதவியல் நிபுணர்கள் மற்றும் பேராசிரியர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்தோ - ஆஸ்ரேலிய தகட்டின் மத்தியில், அதன் தகட்டு எல்லைக்கு அப்பால் இலங்கை அமைந்துள்ளதனால் நில நடுக்கத்திலிருந்து விலகிப் பாதுகாப்பாக உள்ளதெனப் பலரும் குறிப்பிடுகின்றனர். ஆனால் சில நிபுணர்களின் கருத்துப்படி இந்து சமுத்திரப் பகுதிகள் பாரிய நிலநடுக்கம் மற்றும் சுனாமி ஏற்படக் கூடிய பகுதிகளாக உள்ளன என 2004 (9.2) சுமாத்திராப் புவிநடுக்கத்தினை உதாரணம் காட்டிக் குறிப்பிடுகின்றனர். 2021 ஒகஸ்டில் ஏற்பட்ட நில அதிர்வு (4.3) களுத்துறை, மகரகம, மொறட்டுவ, பத்ரமுல்ல தெற்கு, தெகிவளை போன்ற பகுதிகளில் உணரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பேராதனைப் பல்கலைக்கழகப் புவிச்சரிதவியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் சி.பி. திசாநாயக்கா என்பவர் 'இலங்கையின் தெற்கே ஏறக்குறைய 400 - 500 km தூரத்தில் இந்து சமுத்திரத்தின் மத்தியில் புதிய தகட்டு எல்லை காணப்படுகிறது' எனக் குறிப்பிட்டார். இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டே மட்டக்களப்பிலிருந்து 400 km தூரத்தில் புதிய தகடொன்று உருவாகியுள்ளதென்றும் அதனால் பாரிய புவிநடுக்கமொன்று கிழக்கில் ஏற்படப் போகின்றது என அண்மையில் சிலர் தமது கருத்தினை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தியத் தகடும், ஆஸ்திரேலியத் தகடும் 45 மில்லியன் வருடங்களுக்கு முன்னரே ஒன்றிணைந்து உருவாக்கம் பெற்றது. இருப்பினும், இவ்விரு தகடுகளுக்கும் இடையிலான நகர்வு 8 - 10 மில்லியன் வருடங்களுக்கு முன்னரே ஆரம்பித்து விட்டதுடன் இன்று வரை தொடர்வதாகவும் உள்ளது. இத்தகட்டுப் பகுதியில் ஆய்வினை மேற்கொண்ட சிங்கப்பூர், பிரான்ஸ், இந்தோனேஷியா நாடுகளைச் சேர்ந்த ஆய்வாளர்கள் இந்து சமுத்திரத்தின் 'வார்டன்' வடிநிலத் தரையில் புதிய தகட்டு எல்லையொன்று உருவாகின்றதற்கான நிலைமை இருப்பதாகக் கூறினர். இப்பகுதியிலுள்ள தகட்டோட்ட உருமாற்றச் செயன்முறையை மேலும் அறிவதற்கு புவிநடுக்க அலைகளையும் சமுத்திரத் தரையின் இடத்தியலையும் (Topology) பற்றி ஆய்வு செய்தனர்.

ஆனால் 2012 இல் இந்து சமுத்திரத்தின் தென் மேற்குப் பகுதியில் அந்தமான் - சுமாத்திரா பிரதேசத்தினைத் தாக்கிய இரண்டு புவிநடுக்கங்கள் கீழடங்கு வலயம் நெடுகிலும் இடம்பெறாமல் அதற்கு மாறாக தகட்டின் மத்திய பகுதியில் ஏற்பட்ட பெரிய புவிநடுக்கங்களாகக் காணப்பட்டன. இதற்கான புவிச்சரிதவியல் சான்றுகளை அவதானிக்கும் பொழுது வார்டன் வடிநிலத்தில் (Wharton Basin) தரைக்குக் கீழ் ஏற்படும் சில வகையான உருமாற்றமே இதற்குக் காரணம் எனத் தெரிய வந்தது. ஆராய்ச்சியாளர்களுக்கு இது பெரும் அதிர்ச்சியாக இருந்தது. இந்து சமுத்திரத்தில் 2012 இல் ஏற்பட்ட வழக்கத்துக்கு மாறான இப் பாரிய புவிநடுக்கத்தின் குறைத்தளமானது (fault plane) கற்கோளம் - பாகுக் கோளத்தின் எல்லைக்கு நெருக்கமாகச் சென்றமை அவதானிக்கப்பட்டது. சிங்கப்பூர் நாயாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் புவி அவதான நிலையத்தின் (Earth Observation) விஞ்ஞானிகள் இப்புவி நடுக்கத்தின் பின்னர் ஏற்பட்ட உருத்திரிவினை GPS மூலம் அளவீடு செய்தனர். புவிமேற்பரப்பளவீடு (Geodetic observations) மூலமான அவதானிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு சமுத்திர கற்கோள - பாகுக் கோள எல்லையின் கட்டமைப்பைத் தீர்மானிப்பதற்கு இதனை மேற்கொண்டனர். இதன்படி மேல் மூடிப் பகுதியில் நீரின் படையாக்கம் (stratification) 60 - 70km ஆழத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.






2012 இல் நடுக்கங்களுக்கு முன்னரும், பின்னரும் பதிவு செய்யப்பட்ட புவிநடுக்கத் தரவுகள், பல்கர் ஆய்வுக் கப்பல் மூலம் பெறப்பட்ட சமுத்திரத் தரையின் ஆழம் பற்றிய தரவுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி கடல் - தரை பற்றிய உயர் தெளிவுதிறன் கொண்ட படிமங்கள் தயாரிக்கப்பட்டன. இவற்றின் மூலம் அப்பகுதியில் இடம்பெற்றிருந்த உருமாற்றங்கள் பற்றிய தெளிவான விளக்கங்கள் பெறப்பட்டன. இப்பகுப்பாய்வின் படி சுமாத்திராக் கரைக்கு அப்பால் மேற்குப் பக்கமாகப் புதிய குறைத் தொகுதியொன்று (new fault system) விருத்தியாகியுள்ளது என்பது தெரியவந்தது. வார்டன் சமுத்திர நிலத்தில் புவிநடுக்கங்கள் ஏற்பட்ட குறிப்பிட்ட உடைவு வலயத்தில் 2015 மற்றும் 2016 இல் கப்பல்கள் மூலம் விஞ்ஞானிகளினால் சேகரிக்கப்பட்ட சமுத்திரத் தரையின் தரவுத் தொகுதிகள் ஆய்வு செய்யப்பட்ட போது உடைவு வலயத்தின் இடவிளக்கவியல் தெளிவாகத் தெரிந்தது. அடையல் காணப்படும் சமுத்திரத் தரை மற்றும் படுக்கைப் பாறைப் பகுதியில் ஒலி அலைகள் பட்டுத் திரும்பி வரும்போது நேரம் பதிவு செய்யப்பட்டு வடிநிலத்தின் புவிவெளியுருவவியல் பாங்குகள் கப்பலில் இருந்த விஞ்ஞானிகளினால் படமாகத் தயாரிக்கப்பட்டது. இத்தரவுகளை ஆய்வு செய்தபோது உருமாற்றத்தின் காரணமாக கிடை - நழுவு குறைகளின் போது உருவாகும் அமுக்கங்கள் தகடுகளை இழுத்து வேறாக்கும் தள்ளல் செயன்முறைக்கான சான்றுகள் தெளிவாகின்.

உடைவு வலயத்தில் நழுவுக் குறையின் போது வேறாகத் தள்ளிவிடும் ஏறக்குறைய 62 வடிநிலங்கள் (pull-apart basins) படமாக்கப்பட்டன. இவற்றில் சில வடிநிலங்கள் 8km நீளமும் 3km அகலமும் கொண்டு அமைந்துள்ளன. இவ்வடிநிலத்தின் தென் பகுதியில் இறக்கங்கள் (depressions) மிக ஆழமாகவும் (120 மீற்றர்), வடக்குப் பகுதியில் ஆழம் குறைந்தும் (5 மீற்றர்) காணப்படுகின்றது. கிடை - நழுவு குறைகள் தென் எல்லைப் பகுதிக்குரிய தோற்றப்பாடாகக் காணப்படுவதுடன் ஒரு பிரதான குறையில் ஏற்படும் அதிர்வு ஏனைய சிறிய குறைகளிலும் இடம்பெறுகின்றது. இவ்வடிநிலங்கள் 23 லட்சம் வருடங்களுக்கு முன்னரே உருவாக்கம் பெறத் தொடங்கியது. கொலம்பியா பல்கலைக்கழக விஞ்ஞானியின் கருத்தின் படி இவ் வடிநிலமானது ஒரு முழுமையான தகட்டு எல்லையைக் கொண்டதாக இன்னமும் உருவாகவில்லை. ஆனால் பெருமளவு உருமாற்றங்கள் இடம்பெறும் பகுதியாக மாறியுள்ளது. (படத்தில் அவதானிக்கலாம்) இந்தோ - ஆஸ்திரேலிய - மகரக்கோட்டு தகட்டின் விலகல் தொடர்ந்து மிக மெதுவாக இடம்பெறுவதனால் இக் குறிப்பிட்ட குறை நெடுகிலும் இன்னொரு அழிவுதரும் புவிநடுக்கமொன்று அடுத்த 20,000 வருடங்களுக்கு ஒரு முறையே இந்து சமுத்திரத்தில் இடம்பெறலாம். அத்துடன் இத்தகடு முழுமையாக விலகித் துண்டாவதற்குப் பல மில்லியன் வருடங்கள் செல்லும் என்பது ஆய்வு முடிவாகும்.

2012 புவிநடுக்க ஆய்வு முடிவுகளின்படி இலங்கைக்குத் தெற்காகவும், தென்கிழக்கிலும் கடந்த தசாப்தங்களாகவும் அண்மைக்காலத்திலும் இடம்பெற்று வரும் புவிநடுக்கங்களுக்கு இந்திய - ஆஸ்திரேலிய - மகரக் கோட்டுத் தகட்டின் உள்ளே (Intraplate) ஏற்படும் உருமாற்றங்களே காரணமாகும். அண்மையில் ஆஸ்திரேலியாவின் மெல்போர்னில் ஏற்பட்ட 5.9 ரிச்டர் புவிநடுக்கமும் இதே வகையைச் சாா்ந்தது. எனவே இலங்கைக்கு அருகில் 400 கிலோ மீற்றர் தொலைவில் புதிய தகடு உருவாகியுள்ளது என்பது தவறான கருத்தாகும். விலகல் செயன்முறை பல மில்லியன் வருடங்களுக்கு முன்னரே ஆரம்பித்து விட்டது. தனியான தகடாக உருமாற்றம் பெறுவதற்கு இன்னும் பல மில்லியன் வருடங்கள் எடுக்கும்.





எனவே, இலங்கையில் தற்பொழுது உணரப்பட்டுவரும் 3.0 ரிச்டர் அளவுக்குக் குறைந்த நுண் புவி யதிர்வுகள் இந்திய - ஆஸ்திரேலிய - மகரக் கோட்டுத் தகட்டிற்கு உள்ளே (Intraplate) ஏற்படும் (எல்லைகளில் அல்ல) பாறை உருத்திரிவுகளினாலேயே (Deformation) உருவாகின்றன. இப் புவியதிர்வுகள் ஆஸ்திரேலியாவின் மெல்போர்னில் ஏற்பட்டது போன்று உயர் அளவுத்திட்டத்தில் ஏற்படமாட்டாது என்பதை உறுதியாகக் கூறமுடியாது. எனவே, சூழல் அமைச்சர் மஹிந்த சமரவீர அவர்கள் குறிப்பிடுவது போன்று 'புவி நடுக்கம் ஏற்பட மாட்டாது என எவரும் கூற முடியாது. புவிநடுக்கங்களை எதிர்வு கூறுவதற்கு உலகில் தொழில்நுட்பம் எதுவும் இல்லை' என்பது யதார்த்தமே.

(முற்றும்)

# மெய்நிகர் வகுப்பறை

## Online Classroom 40

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)



### மெய்நிகர் பரீட்சைகள் கல்விப்புலத்தின் புதிய சவால்

மெய்நிகர் கற்றலைத் தொடர்ந்து தற்போது மெய்நிகர் பரீட்சைகளில் அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. பாரம்பரியமாக பரீட்சைகள் நடத்தப்படுகின்ற பின்பற்றிவந்த நடைமுறைகளுக்கு முற்றிலும் மாறாக தற்போது மெய்நிகர் பரீட்சைகள் நடைபெறுகின்றன. பாரம்பரிய எண்ணம் மற்றும் பழக்கத்தைத் தாண்டி திடீரென இவ்வாறான பரீட்சைகள் பலருக்கு மனதளவில் ஏற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. மெய்நிகர் பரீட்சை முறை கல்விப்புலத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளது எனலாம். மெய்நிகர் பரீட்சைகள்; பன்முகத்தன்மை கொண்ட நன்மைகளை வழங்குகின்றன. குறிப்பாக மெய்நிகர் சூழல் பாதுகாப்பானது என்ற உணர்வை மாணவர்களுக்கு வழங்குகின்றன. தொலைதூரத்தில் இருந்தபடியே ஒரு வகையில் தனது வீட்டிலிருந்தபடியே பரீட்சைக்கு தோற்றமுடியும் என்பது மாணவர்களுக்கு ஒருவகை பாதுகாப்பான உணர்வை வழங்குகின்றன.

பரீட்சை மாணவர்களின் கல்வி அறிவு மற்றும் பாடத்திட்டத்தின் புரிதலை மதிப்பிடுவதற்காக டிஜிற்றல் முறையில் நடத்தப்படுவதால் பல நன்மைகள் உள்ளன. இது புதிய யோசனைகள் மற்றும் தீர்வுகளை உருவாக்கும் படைப்பாற்றல் திறனை வழங்குகின்றன.

பொதுவாகப் பரீட்சை மதிப்பீடுகள் பேனா மற்றும் காகித அணுகுமுறையின் அடிப்படையில் தான் காணப்பட்டன. இதில் மாணவர்கள் ஒரு இடத்திற்கு வரவழைக்கப்பட்டு வரிசையில் இருத்திவைத்து வினாத்தாள்கள் வழங்கப்படும். வினாத்தாள் ஒதுக்கப்பட்ட நேரத்தில் செய்து முடிக்கப்பட வேண்டும். பின்னர் மாணவர்கள் தங்கள் விடைத்தாள்களை சமர்ப்பிப்பார்கள். பின்னர் மதிப்பீட்டிற்குப் பிறகு தேர்வாளர்கள் தங்கள் மதிப்பெண்களை வெளியிடுகிறார்கள்.

ஆனால் இங்கு மெய்நிகர் பரீட்சை முறையில் அவ்வாறில்லை தேர்வு மையத்திற்குப் பதிலாக, மாணவர்கள் பரீட்சையில் தோற்றுவதற்காக தங்கள் பதில்களைப் பகிர்ந்து கொள்ள ஒன்லைன் அமைப்பில் உள்நுழைகிறார்கள். மதிப்பீடு தானியக்கமாக நடைபெறும். சோதனை முடிவுகள் இயந்திரத்தின் வசதியில் மதிப்பீடு செய்யப்படும்.

குறிப்பாக கல்வி நிறுவனங்கள், கல்வி வல்லுநர்கள் மற்றும் மாணவர்களுக்கான செயல்முறைகளை தொழில்நுட்பம் தொடர்ந்து எளிதாக்குகிறது, அதற்கு வரம்புகள, மட்டுப்பாடுகள் உள்ளன. இருப்பினும், சரியான ஒன்லைன் தேர்வுத் தளத்தைத் தேர்ந்தெடுப்பது இதுபோன்ற குறைபாடுகளைத் தவிர்க்க உதவும்.




மெய்நிகர் பரீட்சை முறைகளின் பல நன்மைகள் உள்ளன – அவை பாதுகாப்பானவை, தனிப்பயனாக்கக்கூடியவை, நம்பகமானவை, அதிக ஊடாடும் திறன் கொண்டவை, குறைந்த நேரம் கொண்டவை மற்றும் பல்வேறு சாதனங்கள் மூலம் அணுகக்கூடியவை. சோதனை என்பது திறன்கள், நடத்தைகள் போன்றவற்றின் ஒரு மதிப்பீடு ஆகும். ஆரம்பக்கல்வி முதல் உயர்கல்வி வரை மெய்நிகர் பரீட்சைகள் பிரபலமாகி வருகின்றன.

கல்வி நிறுவனங்கள் மெய்நிகர் மதிப்பீடுகளுக்கு தம்மை மாற்றுவதன் மூலம் பல நன்மைகளைப் பெறலாம், சுற்றுச் சூழலுக்கு இணக்கமான நிலைமையைக் கொண்டிருப்பது இதன்சாதகமான நிலைமையாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. பாரம்பரியமாக பேனா மற்றும் காகித தேர்வுகள் சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கக்கூடியவையாகக் குறிப்பிடப்படுகின்றன. காகிதத்தின் அதிகப்படியான கழிவுகளைக் கருத்தில்கொண்டு, இயற்கை வளப் பயன்பாட்டைக் குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். காலநிலை மாற்ற நெருக்கடிக்கு தீர்வு காண்பது முன்னுரிமையாக இருக்கும் உலகில், மெய்நிகர் பரீட்சை முறையின் நன்மைகளில் ஒன்றாக சுற்றுச்சூழலை பாதுகாப்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது. காகிதத்திற்காக மரங்களை இரக்கமின்றி வெட்டுவதன் பாதகமான சுற்றுச்சூழல் பாதிப்பு தெளிவாக உள்ளது. இந்தநிலையில் எதிர்காலத்தில் மெய்நிகர் பரீட்சை முறையைப் பயன்படுத்துவது காகிதமில்லா உலகிற்கு வழிவகுக்கும் இது உலகிற்கு நன்மைதருவதாக நோக்கலாம்.

டிஜிற்றல் யுகத்தில் பேனா மற்றும் காகிதத்தின் பயன்பாடு கணிசமாக குறைவடைகிறது. பெரும்பாலான தொழில் வல்லுநர்கள் மின்னஞ்சல்கள், விளக்கக் காட்சிகள், டிஜிற்றல் வடிவமைப்பு மற்றும் பல்வேறு பணிகளுக்கு கணினிகளை நம்பியுள்ளனர். மெய்நிகர் கல்வியில் அதன் பயன்பாட்டில் மனித விருப்பம் கணிசமாக மாறிவிட்டது. எளிமை மற்றும் எங்கும் கல்வி மேம்பட்ட அணுகலை பெறமுடிகிறது. மாணவர்களுக்கு மெய்நிகர் தளங்களுடன் பரிச்சயம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அத்தகைய செயல்முறையுடன் மாணவர்கள் தம்மை இணைக்கும் போது அவர்களின் செயல்திறன் சிறந்ததாக மாறுகிறது.

பாரிய தேர்வு அமைப்போடு தொடர்புடைய மனித, தளவாட மற்றும் நிர்வாகச் செலவுகளைக் கருத்தில் கொள்ளும்போது, மெய்நிகர் பரீட்சைகள் முறை சிக்கனமானதாகும். இந்த முறையில் பரீட்சை நடத்துவது எளிது. பரீட்சைக்கு மாணவர்கள் பெரிய, விசாலமான வகுப்பறைகளில் ஒன்றுகூட வேண்டிய அவசியமில்லை. நேரம் மற்றும் இடத்தின் நெகிழ்வுத் தன்மை காணப்படுகின்றது. ஒன்லைன் தேர்வுகளுக்கு ஒரு வகுப்பை வாடகைக்கு எடுப்பது அல்லது கையேடு கண்காணிப்புக்காக மதிப்பீட்டாளரை பணியமர்த்துவது தேவையில்லை.

பாரம்பரிய பரீட்சை முறையில் தேர்வு நடக்கும் இடத்தைப் பாதுகாப்பது, வினாத்தாள்களை அச்சிடுவது மற்றும் மாணவர்களுக்கு தேர்வு விடைத்தாள்கள் மற்றும் துணைப் பொருள்களை வழங்குவது போன்ற செலவுகள் போன்ற ஏற்பாடுகள் அவசியமாகின்றன. மேலும் ஒரு பரீட்சையை நடத்துவதற்கு ஆசிரியர்கள் முதல் தேர்வுகளை வெற்றிகரமாக நிர்வகிப்பது வரை, அனைத்து தேர்வுகளுக்கும் மிகுந்த வசதியை உறுதி செய்ய வேண்டிய நிர்வாகிகள் வரை எல்லாமே செலவுதான் ஆனால் மெய்நிகர் பரீட்சை முறையில் தேவையற்ற மற்றும் விலையுயர்ந்த செயல்முறைகளை நீக்குகிறது.

மெய்நிகர் பரீட்சையில் முக்கியமான நன்மைகளில் ஒன்று, இது முழு தேர்வு செயல்முறையையும் மேற்பார்வையிட முதலீடு செய்யும் நேரத்தை குறைக்கிறது. தேர்வுத் தளம் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் விலைமதிப்பற்ற நேரத்தை மிச்சப்படுத்துகிறது, இல்லையெனில் அது மீண்டும் மீண்டும் செய்யும் பணிகளில் வீணாகும். தேர்வு மென்பொருள் கேள்விகளைச் சேர்ப்பதற்கும் இறக்குமதி செய்வதற்கும், மாணவர்கள் தேர்வை அணுகவும் மற்றும் தொகுதிவாரியான தேர்வுகளை எளிதாக்கவும் உதவுகிறது.

மேலும், மெய்நிகர் பரீட்சை முறையின் முக்கிய நன்மைகளில் ஒன்று மாணவர்களுக்கான மேம்பட்ட தனியுரிமை ஆகும், இது முழு செயல்முறையின் பயனை உறுதிப்படுத்துகிறது. முறைகேடான செயல்களை நடத்துவதைத் தவிர்க்கிறது. இதனால், மாணவர்களும் முடிவுகளை ஏற்றுக்கொள்கிறார்கள், இது நேர்மறையான வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. இத்தகைய பாதுகாப்பு மற்றும் தனியுரிமை நிலைகள் கல்வி நிறுவனத்தை நோக்கி நேர்மறையான மனநிலையை வளர்க்கிறது மற்றும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடையே வலுவான பரஸ்பர நம்பிக்கையை உருவாக்குகிறது, ஒட்டுமொத்த வெளிப்படைத்தன்மை மற்றும் சார்பு இல்லாத முடிவுகளை உறுதி செய்கிறது எனலாம்.

மேலும் இங்கு தேர்வாளர்கள் எளிதாக கேள்வித்தாளை அமைத்து, தரவரிசை நிர்ணயித்து, மாணவர்களுக்கு அழைப்புகளை அனுப்பலாம். இதற்கிடையில், மாணவர்கள் தொலைதூரத்தில் தேர்வுகளை எடுக்கலாம். ஒவ்வொரு மாணவரும் தேர்வாளரால் நிர்ணயிக்கப்பட்ட ஏற்பாட்டின் படி எழுமாற்றாக தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விகளின் தொகுப்பைப் பெறுவதால்வினாத்தாள் கசிவுகளுக்கும்வாய்ப்பில்லை. ஆசிரியர்களின் சுமையை மெய்நிகர் பரீட்சைகள் குறைக்கின்றன. நேரத்தை மிச்சப்படுத்தும் மற்றும் நியாயத்தை உறுதி செய்யும் குறைபாடற்ற மதிப்பெண் பொறிமுறையை கட்டாயப்படுத்துகிறது. மாதிரி பதிலுடன் பதிலளிப்பவர்களின் பதிலை ஒப்பிடுவதன்



மூலம் தானியங்கி மதிப்பெண் சரியான பதில்களைக் கண்டறியும். சுவாரஸ்யமாக, MCQ கள் ஒன்லைன் சோதனைகளில் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன, ஏனெனில் அவை கணினி மூலம் தானியங்கி மதிப்பெண்ணை எளிதாக்குகின்றன. எனினும் இவை அனைத்திற்கும் மேலாக மெய்நிகர் பரீட்சையினால் பல்வேறுபட்ட கோணங்களில் ஏற்படும் தீமைகள் பற்றி அடுத்து வரும் தொடரில் பார்ப்போம்.

காலைக்கதிர் Kalaikkathir

# மட்டக்களப்பு மாவட்ட மண் ராஜபக்ஷக்களின் கூடாரமா?

## வீதிக்கு இறங்கிய சிறுமி





மட்டக்களப்பு – கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புணானைமேற்கு அணைக்கட்டு பகுதியில் உள்ள 6 நபர்களுக்குரிய காணியில் கிரவல் அகழ்வுக்கு அனுமதி வழங்கப்பட்டு பாரிய குழியில் தோண்டி கிரவல் அகழப்பட்டு வருகின்றது. இந்த கிரவல் அகழ்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக்கள் மற்றும் சிறுவர்கள் கடந்த சனிக்கிழமை கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையுடன், மட்டக்களப்பு மண் ராஜபக்ஷக்களின் கூடாரமா என்ற பதாதைகளுடன் சிறுவர்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேற்படி காணிக்கு உரிமை கோரி ஆறு குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சுமார் ஆறு ஏக்கர் நிலப்பரப்பில் அதிகளவான பகுதியில் கிரவல் தோண்டப்பட்டு பெரிய அளவிலான மரங்களும் அழிக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது அந்தக் காணியில் பயன்தரும் மாமரம், மாதுளை மரம், மரவள்ளி போன்ற பயிர்கள் செய்கை பண்ணப்பட்டுள்ளன என சுமார் 30 பேர் கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு கோஷத்துடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

2015 ஆம் ஆண்டு தொடக்கம் குறித்த காணியில் பயிர்ச்செய்கை பண்ணுவதற்காக பிரதேச செயலாளரால் அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்ததுடன், தற்போது அரச காணியில் எவ்வாறு பயிர் செய்ய முடியும் என பிரதேச செயலாளர் கேட்கிறார் என மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

சந்திவெளியில் உள்ள ஒரு தனி நபருக்கு கிரவல் அகழ்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், கிரவல் அகழ்விற்கு எதிராக வாழைச்சேனை பொலிஸில் ஆறு பேருக்கு எதிராக பொலிஸ் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக பிரதேச செயலாளரை வினவியபோது, மேற்படி சம்பவம் தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

## எட்டுப் பிள்ளைகளின் தந்தை வெல்லாவெளியில் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு -வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 38ஆம் கிராமத்தில் உள்ள வாய்க்காலிலிருந்து கடந்த சனிக்கிழமை ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் 38 ஆம் கிராமத்தின் 3 ஆம் வட்டாரத்தில் வசிக்கும் 47 வயதுடைய 8 பிள்ளைகளின் தந்தையான அமரசிங்கம்-சுந்தரலிங்கம் என உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளார் என வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெள்ளிக்கிழமை மாலை வீட்டில் இருந்து வயலுக்கு போனவர் சனிக்கிழமை வீடு திரும்பாத நிலையில் வயல் வடிகான் நீருக்குள் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சடலம் தொடர்பில் வெல்லாவெளி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## காந்தியின் 152 ஆவது ஜனனதின நிகழ்வு மட்டக்களப்பிலும் நடந்தது

இந்தியாவின் தேசபிதா என அழைக்கப்படும் மகாத்மா காந்தியின் 152 ஆவது ஜனனதினம் சனிக்கிழமை. அதனை முன்னிட்டு இலங்கையில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன.

மகாத்மா காந்தியின் 152 ஆவது ஜனனதின நிகழ்வு மட்டக்களப்பு மாவட்டத்தில் காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மகாத்மா காந்தி பூங்காவிலுள்ள மகாத்மா காந்தியின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

காந்தி சேவா சங்கத்தின் செயலாளர் கதிர் பாரதிதாசன் தலைமையில் இடம்பெற்ற வைபவத்தில் மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

கொரோனா காரணமாக குறிப்பிட்டவர்களுடன் இந்த நிகழ்வு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் அடுத்த மாதம் வருகின்றது நாடாளுமன்றத்துக்கு!

2022 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் 12 ஆம் திகதி நாடாளுமன்றில் முன்வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் இன்று (திங்கட்கிழமை) ஆரம்பமாகவுள்ள நாடாளுமன்ற விவாதத்தில் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவால் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

வரவு – செலவுத் திட்டம் மீதான விவாதம் 7 நாள்கள் இடம்பெறவுள்ளதோடு 16 நாள்களுக்கு குழுநிலை விவாதத்தை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர வரவு – செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.

## இரு கசிப்பு உற்பத்தி நிலையங்கள் மட்டக்களப்பில் முற்றுகையிடப்பட்டன

மட்டக்களப்பு – ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுவன்கேணி பகுதியில் மட்டக்களப்பு மாவட்ட விசேட குற்ற விசாரணைப்பிரிவு பொலிஸாரால் இரண்டு கசிப்பு உற்பத்தி நிலையங்கள் முற்றுகையிடப்பட்டுள்ளமையுடன், இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட விசேட குற்ற விசாரணைப்பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இந்த கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட விசேட குற்றவிசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி ஐ.பி.பி.எஸ்.பி.பண்டார தலைமையிலான குழுவினர் இரண்டு வீடுகளில் முன்னெடுக்கப்பட்டுவந்த கசிப்பு உற்பத்தி நிலையங்களை முற்றுகையிட்டுள்ளனர்.

இதன்போது உற்பத்தி செய்யப்பட்ட 30 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டதுடன், கசிப்பு உற்பத்தி செய்வதற்கான பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது கைது செய்யப்பட்டவர்களும், கைப்பற்றப்பட்ட பொருள்களும் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன என மட்டக்களப்பு மாவட்ட விசேட குற்ற விசாரணைப்பிரிவு பொறுப்பதிகாரி ஐ.பி.பி. எஸ்.பி.பண்டார தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்டவிரோத போதைப்பொருள் விற்பனையைத் தடுக்கும் வகையில் மட்டக்களப்பு மாவட்ட விசேட குற்றவிசாரணைப் பிரிவு தொடர்ச்சியான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.







## இலங்கையை வந்தடைந்தன ஜப்பானியப் போர்க் கப்பல்கள்

ஜப்பான் கடற்படையின் பாரிய போர்க்கப்பல்கள் மூன்று நாட்டை வந்தடைந்துள்ளன.

நாசக்காரி, முரசாமே மற்றும் புயுசுக்கி ஆகிய போர்க் கப்பல்களே கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தன.

பசுபிக் வலயத்தில் உள்ள ஏனைய நாடுகளுடன் இருதரப்பு பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டதை அடுத்து இந்தக் கப்பல்கள் நாட்டுக்கு வருகைதந்தன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தளபதி ஓ.எஸ்.இ. கொய்சிரோவின் கட்டளையின் கீழ் புயுசுக்கி கப்பல் 151 மீற்றர் நீளம் கொண்டது. அதில் 220 உறுப்பினர்கள் பயணிக்கின்றனர்.

எரிபொருள் நிரப்பும் நோக்கத்தில் கொழும்புக்கு வந்துள்ள இந்தக் கப்பல் இன்று (திங்கட்கிழமை) இலங்கையை விட்டு புறப்படவுள்ளது.

ககா என்பது 248 மீற்றர் நீளமான கப்பலாகும். கட்டளை அதிகாரியான கப்டன் நிஷிதா சடோஷியின் கீழ் 210 உறுப்பினர்கள் அதில் உள்ளனர்.

முரசாமே என்பது 151 மீற்றர் நீளமுள்ள கப்பல் ஆகும், இதில் 200 பணியாளர்கள் உள்ளனர். இந்தக் கப்பலுக்கு கப்டன் காஷிவாகி யூச்சிரோ கட்டளையிடுகின்றார்.

ஆஸ்திரேலியாவிலிருந்து கொழும்புக்கு வந்துள்ள இந்த இரண்டு கப்பல்களும் இலங்கை கடற்படையுடன் இணைந்து 'லா –லன் எக்ஸ்' என்ற கூட்டு கடற்படை பயிற்சியில் பங்கேற்கவுள்ளன.

இதனையடுத்து, இன்று கொழும்பில் இருந்து இந்த இரண்டு கப்பல்களும் புறப்படவுள்ளன.



# எந்தவொரு சூழ்ச்சியாலும் அரசைக் கவிழ்க்க முடியாது

## வெளியேற விரும்புவோர் வெளியேறலாம்; பங்காளிகளுக்கு பஸில் மறைமுகப் பதிலடி



**ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசு நிலையான அரசு. இந்த அரசை எந்தவொரு சூழ்ச்சியாலும் கவிழ்க்க முடியாது. அரசுக்குள் எவரும் இருக்கலாம்; எவரும் வெளியேறலாம்.**

**– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளரும் நிதி அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

கெரவலப்பிட்டிய யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகள் அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கப்படுவதற்கு 'மொட்டு'கூட்டணி அரசிலுள்ள பங்காளிக் கட்சியினர் போர்க்கொடி தூக்கியுள்ளனர். அரசுக்கு எதிராகப் பகிரங்கமாகவும் மறைமுகமாகவும் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையிலேயே அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது அரசில் கருத்துச் சுதந்திரத்துக்கு இடமிருக்கின்றது. எவரும் அரசை வாழ்த்தலாம்; விமர்சிக்கலாம்.

ஆனால், அரசை வீழ்த்தலாம் என்று உள்ளேயும் வெளியேயும் யாரும் சூழ்ச்சி வகுத்தால் அது ஒருபோதும் வெற்றியளிக்காது.

அரசுக்குள் எவரும் இருக்கலாம்; எவரும் வெளியேறலாம். எவரும் புதிதாக இணையலாம். எமது கதவு எப்போதும் திறந்திருக்கும். ஆனால், அரசுக்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டுவோருக்கு உரிய நேரத்தில் தக்க பதிலடி கொடுப்போம் - என்றார்.

## சதிகாரர்களை அரசிலிருந்து உடன் வெளியேற்ற வேண்டும்

### இராஜாங்க அமைச்சர் ரொஷான் வலியுறுத்து



அரசுக்குள் இருக்கும் சூழ்ச்சியாளர்களை - சதிகாரர்களை உடனடியாக வெளியேற்ற வேண்டும் என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசு மக்கள் வழங்கிய மூன்றிலிரண்டு பெரும்பான்மைப்பலத்துக்கமைய செயற்பட்டு வருகின்றது. அதனைச் சீர்குலைக்க அரசில் அங்கம் வகிக்கும் எவராலும் முடியாது.

சில அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், அமைச்சரவையில் எடுக்கப்படும் தீர்மானங்களை வெளியில் வந்து விமர்சிக்கின்றனர்.

இவர்கள் அரசுக்குள் இருந்து கொண்டு அரசையே விமர்சித்து வருகின்றனர். இது எந்த வகையிலும் பொருத்தமற்ற செயலாகும்.

இப்படியான நபர்கள் குறித்து மிகத் துரிதமாக தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும்.

தொடர்ந்தும் இந்தச் சூழ்ச்சியாளர்கள் அரசுக்குள் இருந்தால், அது அரசின் பயணத்துக்குத் தடையாக இருக்கும். எனவே, இந்தச் சதிகாரர்களை அரசிலிருந்து உடனடியாக வெளியேற்ற வேண்டும் - என்றார்.



## ஹாட்லி மாணவன் பரிதாப உயிரிழப்பு

சிறுநீரகங்கள் இரண்டும் செயலிழந்த நிலையில் பாடசாலை மாணவர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் வடமராட்சிப் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத் தியுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் 11ஆம் தரத்தில் கல்வி கற்கும் மண்டான், கரணவாய் தெற்கைச் சேர்ந்த கணேசன் கிருசிகன் (வயது - 16) என்பவராவார்.

உடல் நலக் குறைவு காரணமாக நேற்றுமுன்தினம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்தார்.

இது தொடர்பில் நேற்று கரவெட்டி மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

பிரேத பரிசோதனையில் இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்த நிலையில் மாணவன் உயிரிழந்தார் என்று பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாணவன் எதிர்வரும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவிருந்த நிலையில் காலமாகியுள்ளார்.

அவர் பாடசாலை மட்டங்களில் இடம்பெறும் போட்டிகள் மற்றும் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வந்த திறமையான மாணவன் என்று பாடசாலை சமூகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் தனது திறமையை வெளிப்படுத்தி பல பதக்கங்களையும், சான்றிதழ்களையும் பெற்றுக்கொடுத்து பாடசாலைக்கு அவர் பெருமை சேர்த்துள்ளார் என்றும், அவரின் இழப்பு ஹாட்லிக் கல்லூரிக்கு ஒரு பேரிழப்பு என்றும் பாடசாலை சமூகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், அன்னாரின் இறுதிச் சடங்கு நேற்று இடம்பெற்றது.

## திருமலையில் எண்ணெய்த் தாங்கிகளை பார்வையிட்ட இந்திய வெளியுறவு செயலர்



இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஸ்ரீஹர்ஷ்வர்தன் ஷ்ரிங்லா திருகோணமலையில் உள்ள எண்ணெய்த் தாங்கி தொகுதிகளை நேற்று பார்வையிட்டார்.

இந்த எண்ணெய்த் தாங்கிகளின் தற்போதைய அபிவிருத்திகள் மற்றும் இலங்கையின் சக்தி துறைப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக இந்திய - இலங்கை பங்குடைமையை மேலும் வலுவாக்குவதற்கான சாத்தியங்கள் குறித்தும் அதிகாரிகளால்அவருக்குவிளக்கமளிக்கப்பட்டது.

### பிரதேச சபையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸ் உத்தியோகத்தர் வானத்தை நோக்கி இரண்டு தடவை சூடு நடத்தி எச்சரித்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட பிரதேச சபை உறுப்பினர் தன்னை ஈ.பி.டி.பி. கட்சி என அறிமுகப்படுத்தி பல தடவைகள் பொலிஸாருடன் முரண்பட்டு கடமைக்கு இடையூறு விளைவிப்பவர் என்றும் பொலிஸார் மேலும் கூறினர்.

## மேல் மாகாணத்தில் 1,156 பேர் சிக்கினர்

மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட திடீர் பொலிஸ் சுற்றிவளைப்பு நடவடிக்கையில் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 1,156 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைக்கமைய நேற்றுமுன்தினம் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையில் இந்தச் சுற்று வளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட் டது.

இதன்போது நீதிமன்றங்களால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 531 பேரும், ஊழல் - மோசடிக் குற்றச் செயல்கள் தொடர்பில் 491 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களை நீதிமன்றங்களில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.